# அர்ச்சனைமலர்கள்



ஜெயா நடேசன்

# அர்ச்சனை மலர்கள்

திருமதி ஜெயா நடேசன்
அவர்களின்

# கவிதைத் தொகுப்புகள்

# என்னுரை

வாசிப்பதினால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது சிறப்புமிக்கதோர் தமிழ்வார்த்தையாகும். இதனால் அறிவும் வளர்கிறது மனதிற்குறிம் மதியும் கிடைக்கின்றது என்பதும் உண்மைதான். எனதுஅனுபவமும் அதுவேதான்.

1990ம்ஆண்டுதொடங்கி கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் எழுதிக்கொண்டே இருக்கின்றேன் லண்டன்தமிழ் வானொலிக்கு 800க்குமேற்பட்ட கவிதைகளை அதன் கவிதைநேரத்திலும் ரிஆர்ரி தமிழ்ஒலி வானொலிக்கும் பலகவிதைகளை எழுதி வாசிப்பேன். மண்சஞ்சிகையின் ஆரம்பகாலம் தொட்டே (23வருடங்களாக) பலஆக்கங் களை அச்சஞ்சிகைக்கும் ஆன்மீகப்பணியகத்தின் தொடுவானப் பத்திரிகைக்கும் எழுதிவருகின்றேன். அவர்கள் வருடாவருடம் நடாத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றி பலபரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டுள்ளேன்.

எனது முதலாவதுகவிதைதொகுப்பான **தாயகச் சமாதானம்** என்னும் கவிதைநூலை சென்னைமணிமேகலை அச்சகத்தினூடே பிரசுரித்தேன் அதன்உரிமையார் திரு தமிழ்மாறன் ரவி என்பவர் 2000 ம்ஆண்டு ஜேர்மனிக்கே வந்து அப்புத்தகத்தை வெளியீடுசெய்துவைத்தவேளை நற்சான்றிதழும் பாராட்டும் கிடைக்கப்பெற்றேன் அத்துடன் அப்புத்தகம் சென்னையில் கல்வெட்டில் பதிவுசெய்யப்பட்டமை எனக்குப்பெருமை சிறப்பும் தந்துள்ளது. இவையாவும் என்கல்விக்கண்ணை திறந்துவைத்த பெற்றோர்களையே சாரும். அதனால் அம்மலரை என்பெற்றோருக்கே சமர்ப்பணமும் செய்தேன்.எல்லாம்வல்ல இறைவனுக்கும் என்நன்றியை கூறுகின்றேன்

**அர்ச்சனைமலர்கள்** எனும் இவ்வாக்கம் எனது இரண்டாவது கவிதைத்தொகுப்பாகும். இத்தொகுப்பில் என்னுடைய 51 கவிதைகளை பொதிந்து என்கணவர் அமரர் க யூட் நடேசன் அவர்களுக்கு அவரது பத்தாவது ஆண்டுநினைவாக சமர்ப்பணம் செய்கின்றேன். இதனால் நானும் பிள்ளைகளும் மிகவும் ஆத்மதிருப்தி அடைகின்றோம்நான் எழுதிய ஒவ்வொருகவிதையும் ஒவ்வொருவெளிப்பாடுகளைத் தெரிவிக்கின்றன அதில் முக்கியமாக எனது கவலைகளையும் ஆதங்கங்களையும் ஆனந்தங்களையும் பதிவுசெய்திருக்கின்றேன்.

எனது உயிருக்குமேலான என்கணவர் எமைவிட்டுப்பிரிந்து பத்தாண்டு ஓடிவிட்டன .ஆனாலும் எம்மனதைவிட்டு என்றுமே விலகியதில்லை என்றும் எம்முடனேயே வாழ்ந்துகொண்டே இருக்கின்றார். அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் என்னுயிரைக்காத்து தன்னுயிரை முதல்மாய்த்த தெய்வம்.. எனது எழுத்து ஆர்வத்திற்கு உயிரூட்டி ஊக்குவித்த சிறந்த சிந்தனையாளன் .இருக்கும்வரைஎனக்கும் என்பிள்ளைகளுக்குமாகவே வாழ்ந்து பாடுபட்டு உழைத்த ஓர் கடமைவீரன். பொதுப்பணியென்றும் ஆன்மீகம் என்றும் சேவைசெய்து நற்பெயர் எடுத்த நல்லமனிதன். பிள்ளைகளின் வளர்ச்சியும்சிறப்பும்கண்டு அகமகிழ்ந்த நல்லதோர் அன்புத்தந்தை ..என்றும் என்முகத்தில் புன்னகை பூக்கவைத்த உத்தமபுருசன்.எத்தனைவகையில் அவரை மீட்டுப்பார்த்தாலும்............. அத்தனையும் பெருமைக்குரியவையே.நற்குணசீலனான என்கணவர் எம்முடன்வாழ்ந்த காலத்தில் செய்தசேவைக்காவும் அன்புக்காகவும் வாழும் காலம்வரை அவர் பெயர்சொல்லவே வாழ்வோம் என்பதை எம்கவிதைகள் எடுத்துச் சொல்லும்.உங்களுக்கு. எமது அன்பின் அடையாளமாக என் இந்த அர்ச்சனை மலர்த்தொகுப்பினை எங்கள் பிள்ளைகள்சார்பாகவும் சமர்ப்பணம் செய்கின்றேன். அவரின்ஆன்மா நித்திய சீவியத்தில் இளைப்பாறட்டும்.

திருமதி ஜெயா நடேசன்
(எழுத்தாளர் -கவிஞர் -ஆசிரியர்
ஓய்வு பெற்ற மருத்துவதாதி)
Stapeler str-12
48329 Havixbeck
Germany
Telephone-02507 -982287
mobile-017669303220

Most Rev. Dr. Rayappu Joseph, D.C.L. Rome.
Bishop of Mannar, Bishop's House, Mannar, Sri Lanka.
Tel- 023-2222503; 0718428055; 023-2222710 Fax: 023-2222709
e-mail : bishop.rayappu@gmail.com

# மன்னார் ஆயரிடமிருந்து

ஜேர்மனியில் காவிஸ்பெக் என்ற நகரில் 28 வருடங்களாக வசித்துவரும் எனது உறவினரான திருமதி ஜெயா நடேசன் (பாக்கியம்) தம் நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார். அவரது கணவர் மு. யூட் நடேசனின் பிரிவு இவர்களுக்கு தாங்க முடியாத இழப்பாக இருந்து வருவதை நான் அறிவேன். அப்படியிருந்தும் தமிழ், கல்வி, சமயம், கலை, கலாச்சாரம், ஆன்மீகம் சார்ந்த விடயங்களில் தம்மை ஈடுபடுத்தி புலம்பெயர் தமிழர் வரலாற்றில் அழியாத இடத்தைப் பிடித்து வாழ்ந்து வருகின்ற திருமதி ஜெயா நடேசனைப் பெருமகிழ்வுடன் பாராட்டுகின்றேன்.

இவர் லண்டன், பிரான்ஸ் வானொலிகளுக்கு 400க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். அதிலே 51 கவிதைகளைத் தெளிவாக்கி ஷஷஅர்ச்சனை மலர்" என்ற புத்தகத்தை தம் அருமைக் கணவருக்கு சமர்ப்பணம் செய்து அவர் அமரத்துவம் அடைந்த 10ஆம் ஆண்டு நினைவாக வெளியிட உள்ளார். சில கவிதைகளின் தலைப்பைப் பார்க்கும் பொழுது அவருடைய இலக்கியப் போக்கைப் புரிந்துகொள்ள முடியும். அவை நீங்காத நினைவலைகள், அப்பாவின் நினைவில் இயற்கையில் இறைவன், யாருக்குக்கல்லறை, உறவன் உயிராக, தனிநாயக அடிகளார், என் சொத்து என்பன சில கவிதைகளின் தலைப்பாகும்.

அவரின் மலருக்கு வாழ்த்துக்கூறி, அமரர் திருவாளர் யூட் நடேசன் அவர்களின் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புடன்

+ [signature]

மன்னார் ஆயர்

13.11.20

*To serve the Lord in all humility* Acts 20:19

# வாழ்த்துரைகள்



வாழ்க உன் பணி.

அன்பான என் சகோதரியே!

இறைவனின் அடியாளாய் உன் இறைபக்தியை நாளாந்த செபத்தில் கண்டோம். பாடசாலைப் பருவத்தில் உன்திறமை பார்த்ததோம். உன்பணிவு கண்டோம். வளரும்வயதினிலே உன்அன்பும் அமைதியும் பண்பும் கண்டோம் எனதுகடமையின் விடுமுறைநாட்களில் எனக்காக ஆசிரியாக பணிபுரிந்த ஆற்றலைஅறிந்தேன்

மருத்துவத்தொழிலினிலே உன்ஆளுமையும் வெற்றியும் பார்த்தோம் சமையல் தையல் கலைத்துறைகளில் உன்கலைத்திறன் கண்டோம்குடும்பவாழ்வில் சிறப்பான வாழ்வுபெற்று வளமாக வாழ்ந்தாய். வந்தாரை வரவேற்பாய் தங்க இடமளிப்பாய நன்றே கவனிப்பாய் .வெளிநாடுவந்தும் பொதுப்பணி ஆன்மீகப்பணியில் ஈடுபட்டாய் கடும்நோயினால் பாதிக்கபட்டாலும் இறைவன் கரம்தந்தார் நன்றி அவருக்கே உனதுதிறமை எதிலும் என்றும் குறையவில்லை தமிழ் மொழியின் சிறப்பதனை உலகறியச் செய்தவளாய் **"தாயகச்சமாதானம்"** கவிதைத் தொகுப்பை உன்கணவரின் பலத்தினால் எமதுபெற்றோருக்காக சமர்ப்பணம் செய்து புகழடைந்தாய் .உன்திறமைகளை இலக்கியம்-கவிதை-நற்சிந்தனை-போன்றவற்றை எழுத்துமூலமாயும் வானொலிமூலமாகவும் வெளிப்படுத்துகின்றாய் இன்று நீயொரு கவிஞர் எழுத்தாளர் ஆசிரியர் என்ற பெருமைகளைப் பெற்றுள்ளாய். இறைபதம் அடைந்த பாசமுள்ள உன்கணவர்**அமரர் க .யூட் நடேசன்** அவர்களுக்கு **"அர்ச்சனைமலர்கள்"** எனும் கவிதைத் தொகுப்பைசமர்ப்பணம் செய்கின்றாய்அவரின் ஆன்மா சாந்தி பெறட்டும் உன்பணிசிறக்க நலமுடன் வாழ என்றும் இறையாசியுடன் வாழ்த்துகின்றேன். வாழ்க உனது பணி.

என்றும் உன் அக்கா
திருமதி .ஜெயமணி கனகரட்ணம்.-(
இளைப்பாறிய தலைமை ஆசிரியை-நெடுந்தீவு)
Acton.-London

## இறையாசிபெற வாழ்த்துக்கள்.



அன்பின் சகோதரியே!

நீவிர் எழுதிமுடித்த கவிதைகளில் வசனத்திரவியங்களை வாசனை மலர்களாக்கி அதை **"அர்ச்சனை மலர"** எனும் கவிதைத் தொகுபபாய்த் தொகுத்து மைத்துனர் **அமரர் க.யூட். நடேசன்** அவர்களுக்கு அவரது பத்தாண்டு நினைவாக அர்ப்பணிப்புசெய்யும் நற்பணியை அன்புடன் வாழ்த்துகின்றேன்.இந்த அர்ச்சனைமலர் உள்ளத்தைஊடுருவிய எழுத்துக்களை சிறப்பாக அழகாக கவிதைகளாக கொண்டுள்ளது. அவரின் ஆன்மா இறைவன் சன்னிதியில் இளைப்பாறட்டும் உமதுஆரோக்கியமான பணிகளுக்கும் ஆர்வத்திற்கும் என்அன்னையும் வாழ்த்தையும் இறையாசியுடன் தந்துகொள்கின்றேன்.
அன்புடன் உன் அக்கா

Re .Sr.Olivia.Joseph Teacher
Holy Family Convent
Vavunia -Sri lanka.

## தேவதாசன் குடும்பத்தின் வாழ்த்துரை-ஜேர்மனி

அன்பின் ஜெயா அக்காவே!

கவிவளம் கண்ட நவாலியூரிலே என்அத்தைமகனான பண்பின் முகமாக அன்பின் உருவாக நின்றவர் அமரர் திரு க .யூட் நடேசன்.அவர்கள்.

என்வாழ்வினிலே உறவில் மச்சானாய் செயலில் தந்தையாய் நல்லநண்பனாய் செயல்வீரனாய் வாழ்ந்தவர். எந்தவிழாவிலும்என்னுடன் இணைபிரியாத என்அத்தானுக்
காக நீங்கள் கவிதைகளை எழுதிக்குவித்து அதை அர்ச்சனைமலர்களாக அவர்காலடியில் அவரின் பத்தாண்டு நினைவாக சமர்ப்பிப்பதை மனதார வாழ்த்துகின்றோம்.
தேவதாசன் குடும்பத்தினர்

கில்டகைம்
ஜேர்மனி

# அ.பி. யெயசேகரம் அடிகளாரின் வாழ்த்துரை.

அமரர் நடேசன் அவர்கள் பிரிவின் 10 ஆண்டு நிறைவில் அவர் வாழ்வின் மதிப்பீடுகள் பற்றி நானும் அறிந்து மீட்டுக்கொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பு.

மனிதவாழ்வின் இறப்பின் பின் நினைவலைகள் பிறிதொரு உலகில் இருப்புக்கொண்டு எமக்கு உயிர்கொடுக்கிறது. எமக்கு முன் சென்ற கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில்தான் இப்பாருலகமும் இயற்கையும் மனித வர்க்கமும் தப்பிப்பிழைத்து உயிரோட்டமுள்ள மானிடமாக வளர்ச்சியடைந்து நிற்கின்றது. எமக்கு முன் சென்றவர்களின் மதிப்பீடுகள் உலகக் கண்டுபிடிப்புக்கள் இன்றைய நிலைக்கு எம்மை உயர்த்தியுள்ளது.

இப்பின்னணியில் அமரர் நடேசனை நோக்கும் பொழுது தனது வாழ்வையும் உழைப்பையும் நேரத்தையும் குடும்பத்திற்குள் மட்டும் புகுத்திக் கொள்ளாமல் சமுகப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி குறிப்பாக முன்சர் பங்கின் வளர்ச்சிக்கு இலை மறை காயாக தனது மனைவியின் பின் நின்று செயர்ப்பட்டவர். வள்ளுவர் கூற்றில் ஒரு சான்றோனாக வாழ்ந்தவர். தனது பொதுப்பணிகளின் ஊடாக நம்பகத்தன்மையை வழங்கியவர். நல்லதொரு தலைவன் அவர். தன்னை முன்னிலைப்படுத்தாமல் அடுத்தவர்களுக்குப் பின்னால் நின்று ஊக்கம் கொடுக்கும் தலைமைத்துவ பண்புடையார்.

அன்பு தியாகம், உழைப்பு, உத்வேகம் வளர்த்தெடுத்தல் என்று மனிதர்கள் அகவயப்படுத்திக் கொள்ளும் ஓர் ஆளுமை. அதற்கான எதிர்பார்ப்புக்கள் ஏதும் இல்லாத, பலன் எதிர் பார்க்காத மக்கள் நலனில் கலந்து கரைந்து விடுகின்ற ஓர் உயர்ந்த மனிதன். அவரின் ஆண்டுநினைவில் அவரின் ஆன்மசாந்திக்கு வேண்டிநிற்கும்.

அருட்பணி அ.பி யெயசேகரம்
இயக்குநர் நெய்தலம்
யாழ்ப்பாணம்

Dr. J.S.A. Jeyaratnam
Ph.D(Aus), M.Sc(Cey)
B.V.Sct(Myn); B.Sc.AH(Myn)
Justice of the Peace (WA)
AUSTRALIA
25 April 2013

**Mrs. L.I. Jeyaratnam**
MA(Aus),
Grad.Cert. of
Edu.(Aus)
BA(Aus), BA(Cey)



## வாழ்த்துரை

வாழ்வில் ஒருவரை அடையாளப்படுத்துவது அவரது மொழியும் கலாச்சாரமுமேயாகும். இவற்றை மையமாகக் கொண்டு ஒரு குடும்பத்தின் பெருமை அமைகிறது.

அன்னை மடியில் தவழ்ந்து உற்றார் உறவினரோடு கூடிக்குலாவி மகிழ்ந்து வாழ்ந்த தமது தாயக மண்ணை விட்டுத் தமது குடும்பங்களுடன் புலம்பெயர்ந்து ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் தமது வாழ்க்கையைத்தொடரும் என் உடன் பிறந்த சகோதரர்கள் தமது மொழி கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாப்பதன் பெருமை எமைப்பெற்ற அன்புத் தாயாருக்கும் சிறப்புற வளர்த்த எம் தந்தைக்குமே உரித்தாகும்.

இத்தகைய பெருமை மிக்க குடும்பத்தில் பிறந்த எனது தங்கை ஜெயபாக்கியம் நடேசன் மேலைத்தேய நாகரீகத்தில் தமிழ்ப்பண்பாடு சிக்கிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தையும் கலை காலாச்சாரத்தையும் வளர்ப்பதன் மூலம் எமது பண்பாட்டைக் காப்பாற்றி வளர்க்க முன்னின்று முயற்சிப்பவர் என்பது மிகையாகாது.

பள்ளிப்பராய முதல் பொது அறிவுப்போட்டிகளில் பங்குபற்றுவதில் மிக்க ஆர்வம் காட்டிய தங்கை ஜெயா, இன்று தமது சொந்தப்படைப்பான பொது அறிவுக்களஞ்சியம், விஜயாவின் களஞ்சியம் என்ற நூலை வெளியிடுவதன் மூலம் வருங்கால சிறார்களுக்கு மட்டுமன்றிப் பெற்றார்களும் தமது பொதுஅறிவை வளர்க்க வழி சமைத்துள்ளார்.

ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்த காலமுதல் பல கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வமும் ஊக்கமும் கொண்ட தங்கை ஜெயா தமது

முதற்கவிதையாக ''தாயகச்சமாதானம்'' எனும் நூலை 2000ஆம் ஆண்டு வெளியீட்டு சிறப்புச்சான்றிதழும் பாராட்டும் பெற்றுள்ளார்.

மேலும், உலகத்தமிழ்ப் பேரவைத்தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தம் அவர்களால் நடாத்தப்பட்ட உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கவி அரங்கில் மட்டுமன்றி ''தமிழருவி'' பத்திரிகை ஆசிரியர் திரு நயின விஜயன் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியிலும் பங்குபற்றியதோடு இடங்களையும், தங்கப்பதக்கம், சிறப்பு சான்றிதழ்கள், பரிசுகள், பாராட்டுக்களையும் பெற்ற பெருமையுடையவர்.

இவை மட்டுமன்றி 2012ஆம் அண்டு பிரான்ஸில் கவிஞர் கண்ணதாசன் அரங்கில் நடைபெற்ற தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் கவிதை பாடியும், லண்டன் தமிழ் வானொலி நடாத்தும் வாராந்த கவிதை நிகழ்விற்கு 800ற்கு மேல் கவிதைகள் எழுதியும் பாராட்டுப்பெற்றவர்.

இன்றும் கூட பிரான்ஸ் TRT வானொலி நடாத்தும் பொது அறிவுப்போட்டியிலும் லண்டன் தமிழ் வானொலி நடாத்தும் பொது அறிவுக்களஞ்சியப் போட்டி நிகழ்வுகளிலும் பங்குபற்றித் தொடர்ச்சியாகப் புள்ளிகள் பெற்று வருவது அவரது பொது அறிவினை வளர்ப்பதில் எவ்வளவு ஆர்வமும் ஊக்கமும் கொண்டுள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

தமிழ்க்கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்க அயராது உழைக்கம் தங்கை ஜெயாவை எமது பெற்றோர் இன்று இருந்திருந்தால் அளவற்ற பெருமை அடைவதுடன் ஆசியும் அளித்திருப்பர். ஆதலால், அவர் தமிழ்க்கலாச்சாரத்தையும் தமிழ் உணர்வையும் ஐரோப்பாவில் பேணும் தமது பணியைத் தொடர்ந்து நடாத்த எமது பெற்றோர் சார்பில் வாழ்த்தி ஆசி அளிக்கின்றோம்.

**அன்பின் அண்ணா, அண்ணி**

## திரு .சகாதேவன் சுப்பிரமணியம அவர்களது வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் என்று சொன்னாலே -மனதெல்லாம் நீ தான் நண்பா! நீ மரணித்தாய் என்றபோதே.....மானிப்பாய் ......எனக்கு வெறுப்பாயாச்சு தொழிலோடு சேர்ந்த உறவு அந்த -தொழிலோடே......முடிந்தே போகுமாம் தொழில் தவிர்ந்த நேரங்கூட -தொடர்ந்ததே நம் உறவுநண்பா!

எம் இளமையின் பக்கமெல்லாம் இருவரும் பிரியாதிருந்தோம் அன்று கஸ்டங்கள் வந்தபோது கடவுளின் ஞாபகமேயில்லை நண்பன் நடேசனின் முகமே தெரிந்தது

திருமண பந்தத்தோடு -நான் திருமலை சென்றுவாழ இருவரும் உடலால் பிரிந்தோம் ஜெயா பாக்கியத்தோடு -நீயும் திருமணமாகிச் செல்ல தொலைபேசி வயர்களுக்குள் -சுருங்கியது நமது நட்பு அரசியல் மாற்றத்தால் -ஆளுக்கொரு திக்காய் பிரிய ஜேர்மனி வந்தாய் நீயம் காலனும் சேர்ந்தே வந்தானோ.... கணக்கதை முடித்துச் செல்ல உன் நட்பதைப்பறி கொடுத்து பத்துவருடங்கள் பறந்துபோச்சு பற்றல நம் நட்பின் நெருப்பு பசுமரத்தாணிபோல...... பசுமையாய் நெஞ்சில் நீதான் ஜெயபாக்கியம் பிள்ளைகளோடு ஜெபிபிபேன் உனக்காய்தினமும் அர்ச்சனை மலரை அர்ப்பணம் செய்யும் ஜெயாவை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

உற்ற நண்பன்

**திரு சுப்பிரமணியம் சகாதேவன்**

கொழும்பு -பிரான்ஸ்.

Dr. Mrs. K. Vasanthananthan
D.A.M&R.I.M.P; .
(Siddha- Ayurvedic medical physician)
3706 GB zeist . Holland. .. 01.06.2013

## வரிகளில் புரிந்தேன்....... வலிதனை

உள்ளத்து உணர்வுகளை
உரிமைவேட்கைதனை
உலகின் சில நடப்புக்களை
சிலர் நடிப்புத்தனை
கள்ளமற்ற உள்ளத்தால்
கணக்கெடுத்து அதை
அள்ளித்தந்த அன்னைத்
தமிழ்வரிகளை கவிகளை
புள்ளிவைத்தாய் தாயே!
**அர்ச்சனை மலர்களென்று**
அதையுன் துணைக்கு பத்தாண்டு
நினைவாக படைத்தாய் தாயே!
போற்றுகின்றேன் வாழ்த்துகின்றேன்.
பாதி பாதியென வாழ்ந்த வாழ்வின்
பத்தாண்டுப் பாதிப்பை கண்டேன்
பிரிவின்துயரத்தை புரிந்த இவளுக்கு
புரிந்தது தாயே உன்மனம்.
எரியும் தீயில் தினம் நடக்கும்
இவ்வுலக வாழ்க்கையில் .....
எல்லாமே இறைவன் செயலென
ஏற்கும் மனமும் நினைவுகளும்
இழப்புக்களைத் தாங்கமுடியாத
வேதனையும் புதிதல்ல.புரிந்தேன்.
சிறுஎறும்புபோல் எனக்கும் இதில்
சந்தர்ப்பம் தந்தாய்தாயே! நன்றி .
நல்லவர் வாழ்வர் -நம்தமிழுக்கு
நற்தொண்டாற்றியவரும் வாழ்வர்
நாளை இம்மண்ணில் நின்பெயரும்
நன்றே வாழும் வாழும்.
வாழ்த்துபவள் :- திருமதி கலைச்செல்வி வசந்தானந்தன்
சித்தஆயுர்வேதவைத்தியர் -கொலண்ட 30 05 2013.
*வாழ்கதமிழ்-அன்பே உலகமயம்.*

## றோஸ் ஜெயரட்டினம் குடும்பத்தினர -பிரான்ஸ்

அன்புச்சோதரி!

நடாவை இறைவன் அழைத்து இன்று10வருடங்கள் பறந்தே விட்டதே!அவரின் அன்பின் நினைவான உமதுகவிதைகளை தொகுத்தஇந்த அர்ச்சனைமலர் எனும் நூல் வெளியீடுகண்டு பெருமிதம் கொள்கின்றோம் எமதுகுடும்பம் சார்பாக வாழ்த்துகின் றோம்நடாவின் ஆன்மா சாந்தியடையபிரார்த்தித்து உம்மையும் உம்பணி தொடர வாழ்த்துகின்றோம்-

**றோஸ் ஜெயரட்டினம் குடும்பத்தினர்**
**பிரான்ஸ்.**

## திருமதி லங்கா கோவிந்தன்-லண்டன்

அன்பின் நண்பி ஜெயா!

எமதுநீண்டகால நட்பின்உறவு எம்மில் ஒன்றுகலந்த இரட்டைக் குழந்தைகள் மாதிரி உன்னையும் என்னையும் ஒன்றுசேர்த்த நட்புப்போலவே எம்விதியிலும் எம்மைத்தனிமை யாக்கியுள்ளது.

உமது கணவரின் நினைவாக உமதுகவிதைத் தொகுப்பை அர்ச்சனை மலராக்கி அர்ப்பணம் செய்வதை மனதார வாழ்த்தி வரவேற்று பெருமைப் படுவதுடன் நடாவின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக் கின்றேன்

அன்புடன் நண்பி
**திருமதி .லங்கா கோவிந்தன் -லண்டன்**

## வாழ்த்துரை

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என பள்ளியில் படித்த வாக்கு இன்னும் எம்மத்தியில் உள்ளது. ஆனால் நம் நடைமுறையில் நம்மிடம் போதுமென்ற மனம் இல்லையே. அப்படி இருந்துவிட்டால் வாழ்க்கையே வசந்தமாகிவிடும். கிடைத்தவற்றை போதுமானதென ஆக்கிக் கொள்வதிலும், கிடைக்காதவற்றை நினைத்து ஏங்காமல் இருப்பதுதான் நிம்மதியென வாழ்கைக்கு உறுதியான அடித்தளம் கிடைக்கின்றது. எனவே இல்லாததை நினைத்து உமது கணவர் விட்டுச் சென்ற திருப்தியான வாழ்க்கையில் பிள்ளைச் செல்வங்களுடன் வாழ்ந்து கொள்ள வேண்டும் என்பதே இறைவனின் நியதி. நாங்கள் இப்படித்தான் வாழ்வோமென்று எண்ணங்கொண்டால் மனம் நிறைந்த வாழ்க்கை கிடைத்துவிடும். நம்மிடம் இருப்பதை நினைத்து பெருமைப்படுவோமானால் நிம்மதி நம்வாசல் தேடிவந்து நிச்சயம் தட்டும்......

உமது அன்புக் கணவரின் பிரிவுத் துயரினை அடக்கி அவரின் ஆத்மா உயர்வுக்காய் நாமும் உம்முடனும், பிள்ளைகளுடனும் சேர்ந்தும் "அர்ச்சனை மலர்கள்" கவிதைத் தொகுப்பினை நயினை நாகபூசணி அம்பாளை பிரார்த்தித்து சமர்ப்பணம் செய்கின்றோம். கவிதைத் தொகுப்புகளுக்கும் முயற்சிக்கும் வாழ்த்துக்கள் கூறிக்கொள்கிறோம்.

அன்புடன்
**மாலா விமலராஜன்**
ஒஸ்லோ நோர்வே

## திருமதி புஸ்பவதி சிவநாதன் - லண்டன்

அன்பும் பண்பும் நிறைந்த பெணேயானதிருமதி ஜெயாநடேசன் அவர்கட்குலண்டன் தமிழ் வனொலிமூலம் 800கவிதைகளுக்குமேல் 12 ஆண்டுகளாகபதிவுசெய்துள்ளளீர்கள். உங்கள் திறமையினை. இப்போ அமரரான உங்களகணவரின் நினைவாக அர்ச்சனைமலர் எனும் கவிதைத்தொகுப்பை வெளியிடுவதில் மிகவும் சந்தோசப் படுகின்றேன் உமதுகவிதை அனுபவங்களும் அறிவூட்டலும் எதிர்கால சந்ததியினரின வளர்ச்சிக்கு துணையாகஇருக்கும் என்பது வெள்ளிடைமலை. .பலரது கரங்களில் இவ்மலர் தவழவேண்டும் என்பதே என்விருப்பம். அதற்காய வாழ்த்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்திக்காக பிராத்திக்கின்றேன்.

திருமதி புஸ்பவதி சிவநாதன்
**- லண்டன்.**

# கலைவாணியின் வாழ்த்து

காலத்தின் கண்ணாடியே கவிதைகள்.காலத்துக்கு காலம் மாறிவரும் சமூக அமைப்பு நாட்டு நிலமைகள் மக்களின் வாழ்வியல் மாற்றங்கள் போன்றவற்றை சங்ககாலம் முதல் எழுதப்பட்ட கவிதைகள் மூலம் நாம் அறியமுடிகிறது. புலப்பெயர்வின் பின் ஈழத்து உறவுகள் தத்தமது தாய்மொழியை மறக்காது இருக்கவும் புலம்பெயர் வாழ்வியலை பதிவாக்கிக் கொள்ளவும் பேனாவைக் கையிலெடுத்தனர். தமிழ்மொழியின் உன்னதத்திற்கு உயிர் கொடுக்க கவிதைகள் கட்டுரைகள் கதைகள் என பல ஆக்கங்களை எழுதிக்கொண்டே இருக்கின்றனர் .இவர்கள் ஒவ்வொருவரும் போற்றப் படவேண்டியவர்களே. இங்கு திருமதி.ஜெயா. நடேசனின் பணியும் அத்தகையதே. தமிழில் பற்றும் பாண்டித்தியமும் கொண்ட இவர் ஜேர்மனிய நாட்டில் பல சஞ்சிகைகளிலும் பல ஊடகங்களிலும் .கதை கவிதை கட்டுரை இலக்கியம் என பல ஆக்கங்களை எழுதிக் குவித்துள்ளார். இவர் தமிழ் உணர்வு மட்டுமல்லாது கலை ஆர்வமும் மதப்பற்றும் கொண்டவர். புலம் பெயர்ந்து வாழும் பல்லாயிரம் குடும் பங்களுக்கு இவர் எடுத்துக் காட்டாய் வாழ்கிறார்.

கவிதை புனைவதில் வல்லவரான இவரை பல வருடங்களாக நான் அறிவேன். மண் சஞ்சிகையின் 23 வருட சேவையில் ஆரம்ப எழுத் தாளர் மட்டுமின்றி லண்டன் தமிழ் வானொலியின் ஆரம்ப ஆக்க தாரரும் இவரே. இவரது படைப்பாற்றலின் சாட்சியாக இப்போ வெளிவரும் அர்ச்சனைப் பூக்கள் நூல் இவரது மூன்றாவது படைப்பாகும்.

இவரது அர்ச்சனைப் பூக்களை நானும் முகர்ந்து நுகர்ந்தேன். வாழ்வியல். குடும்பம். காதல். ஆண்மிகம். மன உணர்வுகள்இ வர்ணணைகள் எனப் பல்வேறு பக்கங்களைக் வருவாகக் கொண்டு சமைத்த கவிதைகள் இவை. சொல்லவேண்டிய விடயத்தை பக்குவமாக. மொழிநடை. சொல்ஆட்சி. அணிகள் போன்றவற்றைக் கையாண்டு அழகாக வெளிப்படுத்தியுள்ளார். திருமதி. ஜெயா.நடேசன் அவர்கள் பாடல்களையும் அற்புதமாக எழுதுபவர். இவர் எழுதிய 90 பாடல்களை நான் இசையமைத்துப் பாடியுள்ளேன். இவை அனைத்தும் லண்டன் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி நேயர்களின் பாராட்டுதல்கள் கிடைக்கப்பெற்றன. இவரது ஆற்றல்கள் மேலும் பிரவாகமாகி காலம் கடந்தும் நிலைத்து நிற்க இறையாசி வேண்டி மனதார வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

கலைவாணி. ஏகானந்தராஜா
(Dip. In Music )



எழுத்துப் பணியில் இடைவிடாது உழைத்துக்கொண்டிருக்கும் திருமதி. ஜெயா நடேசன் அவர்கள், எமது நிர்வாகத்தினராலும் நேயர்கள் அனைவராலும நன்கு அறியப்பட்டவர். இவரின் கவிப் பயணத்தின் மைல் கல்லாக அமைந்திருக்கும், **அர்ச்சனை மலர்கள்** கவிதைத் தொகுப்பானது, எமது கவிதை பாடும் நேரம் நிகழ்ச்சியில், கவிப் பிரியர்களை கவிமழையில் நனைய வைத்த தனது கவிதைப் பூக்களின் கதம்பமாக, செவ்வாய் கவிதையெனக் கோர்த்து அளித்துள்ளார். எமது ரீ.ஆர்.ரீ தமிழ் ஒலி வானொலி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை, தனது மொழி மீதான பற்றைக் கவிதை மூலமாகக் காத்திரமாக முன்வைத்திருக்கின்றார்.

தாயகத்தின் பசுமையான நினைவுகளை **முற்றத்து மல்லிகைப் பந்த(லி)ல்** அசைபோட்டு ரசித்திருக்கும் நூலாசிரியர், தமிழுக்குப் பெருமை சேர்ந்த **உலகத் தந்தை தனிநாயகம் அடிகள், பெண்விடுதலை** விரும்பி **பாரதி இன்றிருந்தால்** என இவர்களையும் மறக்காமல் அர்ச்சனை மலர்களால் அஞ்சலி செய்திருக்கின்றார். **''விடியலைத்தேடி, கனவு கண்டேன் யார் வருவார் துணைக்கு''** என ஏங்கும் **முதுமைப்பருவம்...! எதிர்காலம், திருப்பம்** தருமா எனத்தெரியாமல், **உறவுகள்** மறைத்து நிற்கும் **ஊமைக் காதல், ''இயற்கையினூடாக இறைவன், யாருக்கு கல்லறை** என முடிவு செய்வான்'' எனும் பல வாழ்வியல் சிந்தனைகளுடன் ஒன்றுபட்ட இக் கவிதைத் தொகுப்பானது, வாசகர்கள் மனதில் ஜீவனுள்ள கவிதைகளாக என்றுமே வாழும்.

கவிதை விரும்பிகளின் இதயத்தில் பெரும் பகுதியை, அர்ச்சனை மலர்கள் கொண்டு நிரப்ப முயற்சித்திருக்கும் திருமதி. ஜெயா நடேசன் அவர்களுக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் என்றும் இருக்கும்.

நீண்ட காலமாக கவிதைப் பாதையில பயணித்துவரும், திருமதி ஜெயா நடேசன் அவர்கள், தனது அன்புக் கணவர் அமரர். திரு. நடேசன் அவர்களுக்கு, அர்ச்சனை மலர்கள் கொண்டு அன்பு மாலை சூட்டி, சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

**நேசம் நிறைந்த வாசகர்களின் நெஞ்சவீதிகளில்,**
**தூவப்பட்டிருக்கும் அர்ச்சனை மலர்கள்**
**சிந்தனா உலகில் சஞ்சரிப்பதன் மூலம்**
**மணம் வீசி, இதம் தரட்டும்.**

ரீ.ஆர்.ரீ. தமிழ் ஒலி வானொலி
பிரான்ஸ்.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

Tamilischer Bildungsverein Deutschland e.V.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றைய வை"

# மலர் மலர்ந்து மணம் வீசட்டும்

''அர்ச்சனை மலர்'' ஒன்று மலர்வதை அறிந்து அகம்மகிந்து இவ்வாழ்த்தினை இணைக்கின்றோம். திருமதி. ஜெயா நடேசன் அவர்கள், தான் எழுதிய கவிதைகளில், ஒவ்வொரு மலராகத் தேர்ந்தெடுத்து, (51) ஐம்பத்தொண்று கவிதைகளை நறுமணம் பரப்பப் பதிப்பிக்கின்றார். நன்றே நறுமணம் நல்க வாழ்த்துகின்றோம்.

திருமதி. ஜெயா நடேசன் அவர்கள், புலம்பெயர்ந்து ஜேர்மன் நாட்டின் கவிஸ்பேர்க் என்ற நகரத்தில் வாழ்ந்து வருகின்றார். ஆன்மீகப் பணிகளில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டுவரும் அவர்கள், சமுதாயப் பொறுப்புக்களை உணர்ந்து சமூக நோக்கில் செயற்படுவர். பல பொது நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்பட்டு வருபவர். அண்மையில், வண பிதா தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவினைப் பல அமைப்புக்களுடன் சேர்ந்து நடாத்துவதற்கு முன்நின்று உழைத்தவர்.

நீண்ட காலமாக சஞ்சிகைகளுக்கும், வானொலிகளுக்கும், பத்திரிகை களுக்கும் ஆக்கங்களை எழுதி வருபவர். ''அர்ச்சனை மலர்'' இவரது இரண்டாவது நூலாக வெளிவருகின்றது.. அர்ச்சனை மலர், சமுதாயத்திற்கும், இளம் சந்ததியினருக்கும் பயன்படும் நற்கருத்துக்களைக் கொண்டு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டுகின்றோம். ''அர்ச்சனை மலர்'' யாவருக்கும் நறுமணம் வீசும் தென்றலாக வெளிவர எமது இதம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

அமரர் நடேசன் அவர்களுக்கு ''அர்ச்சனை மலராக'' 51 கவிதைகளை சமர்ப்பணம் செய்வதற்கு நன்றிகளும் வாழ்த்துக்களும்.

**பொ. சிறிஜீவகன்**
தலைவர் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
உப தலைவர் தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி
15.07.2013




Tamilischer Kultur und Wohlfahrts verein Essen e.V

நுண்கலைக்கல்லூரி எசன்-யேர்மனி




# தங்கள் இலக்கியப்பணியோடு சமூகப்பணியும் சிறந்தோங்குக!

மதிப்புக்குரிய எழுத்தாளர் கவிஞர் திருமதி. ஜெயா நடேசன் அவர்கள் அர்ச்சனை மலர்கள் என்ற கவிதை நூலை வெளியிடுவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பல ஆண்டுகளாக பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் கவிதைகள் பல எழுதியும், வாசித்துமுள்ளார். சமுதாய நோக்கும், இலக்கிய வாஞ்சையும், இதயத்தில் சுமந்து தனது கணவரின் ஒத்துழைப்போடு நல்ல பல சேவைகள் புரிந்தவர் சகோதரி ஜெயா. நடேசன் அவர்கள்.

1994ஆம் ஆண்டு தமிழருவிப் பத்திரிகையின் 2வது ஆண்டு விழாவையொட்டி ஐரோப்பா ரீதியில் நடாத்தப்பெற்ற கவிதைப்போட்டியில் ''நெஞ்சம் இனிக்கிறது பிரிவு பொய்யாகிப்போகாதோ'' என்ற தலைப்பிலான பிரிவில் முதலாவது இடத்தைப்பெற்றுத் தங்கப் பதக்கம் வென்று, மூவாயிரத்துக்குமதிகமான பார்வையாளர்கள் முன் மதிப்பளிப்பைப் பெற்றார்.

சொல்வளமும் கருத்தாளமும் மிக்க இவரது ஆக்கங்களால் பல வாசகர்களை தன்னகத்தே ஈர்த்து வைத்துள்ளார்.

அண்மையில் யேர்மனி முன்ஸரர் நகரில் நடைபெற்ற தமிழ்தூது சேவியர் தனிநாயகம் அடிகளாரது நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக்குழுவில் ஒருவராகச் சிறப்பாகப் பணியாற்றியிருந்தார்.

இவரது இலக்கியப்பணியும் சமூகப்பணியும் சிறந்தோங்க எல்லோருக்கும் பொதுவான இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வளர்க தமிழ்த்தொண்டு !!!

***தமிழ்வேள் நயினை விஜயன்***
***மணிபல்லவம் - 2.7.2013***
***ஆசிரியர் தமிழருவி***

*பொறுப்பாளர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்*
*நுண்கலைக்கல்லூரி எசன்-யேர்மணி தமிழர் கலாச்சார நற்பணிமன்றம்.e.V*
*ஆசிரியை சசிகலா விஜயன் (அறநெறிப்பாடசாலை) எசன்-யேர்மனி*



**Prof. Dr. S. J. Emmanuel**
Sandweg 4
48720 Rosendahl
Tel. 0049(0)2545/919574
Mob.0049(0)1602753006
email: sjemmanuel@t-online.de

## கணவனைக் கௌரவிக்கும் கவிதைகள்

திருமதி ஜெயா நடேசன் அவர்கள் மறைந்த தமது அன்புக் கணவரை ஒரு கணமேனும் மறக்காதவராக, கடந்த 10 வருடங்களாக நினைத்து நினைத்து தாம் எழுதிய கவிதைகளை வெளியிடுகிறார். இவரின் குழும்பத்தை அறிந்தவனென்ற மட்டில் இம்முயற்சியையிட்டு மகிழுகின்றேன். இதற்காக எனது பாராட்டுக்கள்.

திரு. கந்தையா யூட் நடேசனை நான் பல தடவைகளில் சந்தித்துக இருக்கிறேன். இறுதிப் படுக்கையிலும் அவரைத் தரிசித்திருக்கிறேன். அவர் தன்னை தமது குடும்பத்தின் நலனுக்காக முழுமையாக அர்ப்பணித்த உத்தமன். முதிர்ச்சியிலே கிறீஸ்தவனாகினாலும், தமது குடும்பத்தை ஒன்றாக ஆன்ம வளர்ச்சியிலேயே வழி நடத்தினார். கல்வியிலும் கலையிலும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஊக்கமளித்தவருக்கு, அவரது மறைவை மனைவி ஜெயா தனது கவிதைகளினால் கௌரவிப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

மண்ணிலிருந்து மறைந்தவர் மண்ணுக்கு திரும்பமாட்டார்கள்.
மனிதரின் அன்பு உள்ளங்களில் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருப்பர்.
ஆனால் மறைந்தவரும் மறக்காதவரும் ஆண்டவனில் சேர்ந்திருப்பர்.

பணியாளன் **எஸ்.ஜே.இம்மானுவேல்**
23. 08. 2013

# நடேசன் அவர்கள் இன்றிருந்தால்...

முதலில் ஆற்றலும் துணிச்சலும் உள்ள ஒரு சமூகப் பெண்ணை,
வீட்டுத் தாயாக காலத்தை கழிக்க விட்டு விட்டேனே என்று கலங்கியிருப்பாரோ?
நல்ல வீட்டுப் பெண் என்ற நிலையிழந்தார். காரணம், அதையும் தாண்டி சமூகத் தாயாரானாரே..
பிள்ளைகளுக்காக வாழ்ந்த தாயார் என்ற நிலையிழந்தார். இப்போ பிள்ளைகள் தேடி அழைக்கும் தாயாரானாரே..
குடும்பப் பணிவிடை செய்து, கணவரையே பின் தொடர்ந்தார்.. இப்போ துணையேதுமின்றி தானே உலக வலம் வருகின்றார்...
தன் பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வியூட்டினார். இப்போ பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம் மொழியூட்டுகின்றார்.
புத்தகங்கள் விரும்பிப் படிப்பார். இப்போ, இவர் புத்தகங்கள் பலர் படிக்க வெளியாகின்றன.
கவிதை, இலக்கியம், சிந்தனை விரும்பிக் கேட்பார். இப்போ, இவற்றை நூற்றுக் கணக்கில் தினமும் படைக்கின்றார்.
கும்பத்தோடு சுற்றுலா செல்வார். இப்போ, குடும்பங்கள் இருக்குமிடங்கள் எல்லாம் சுற்றுலா செல்கின்றார்.
கணவரோடு சேர்ந்து பலரை வாழ்த்தி கௌரவித்திருக்கின்றார். இப்போ, லண்டன், ஜேர்மனி தோறும் இவர் "சாதனைப் பெண்ணாக" வாழ்த்தி கௌரவிக்கப்படுகின்றார்.
வானொலி தொலைக்காட்சிகளில் பங்கு பற்றுவது இவரது பெரும் பொழுதுபோக்கு. இப்போ, இவரே அதில் தொகுப்பாளராகி, பலரது பொழுதைப் போக்குகின்றார்.
ஊடகங்களில், ஏராளமான நேயர்களில் ஒருவராக இருந்தார். இப்போ, இவற்றில் இவருக்கு ஏராளமான நேயர்கள் உண்டு.
பாடல்கள் கேட்டு மனதைப் பறி கொடுப்பவர். 100ற்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதி, பலரது மனதைப் பற்றிக் கொண்டிருக்கின்றார்.
பிள்ளைகள் கணனி இயக்குவதை பார்த்து மகிழ்ந்தவர். இவரே கணனி இயக்கி, உலகிற்கு தோற்றமளிப்பதை இப்போ, பிள்ளைகள் பார்த்து வியக்கின்றனர்.
நீர் இல்லாமல் தனியே வாழ மாட்டேன் என கணவரிடம் செல்லம் பொழிந்தவர். கணவனை மனதில் வைத்தே, தைரியமாய் ஆண்டுகள் 10 தனியாய் வாழ்ந்து, "கணவரையே" வியக்க வைக்கின்றார்.
அப்பா அப்பா என கணவரைப் பற்றிப் பேசுவது முன்னைய ஜெயா. கணவரை முன்நிறுத்தி படைப்புகள் செய்வது இப்போதைய ஜெயா. இன்னும் இன்னும் எத்தனையோ...
இதோ -லண்டன் தமிழ் வானொலி + பாமுகத்தில் வெளியான தன் கவிதைப் படைப்புகளை, ஆருயிர் கணவனார் பூட் கந்தையா நடேசன் அவர்களது 10வது நினைவு வாழ்வில், "அர்ச்சனை மலர்களாக" வெளியீடு செய்கின்றார், எங்கள் "சாதனைப் பெண்" ஜெயா நடேசன் அவர்கள்..
இறை சிந்தனையாளர், எழுத்தாளர், ஆசிரியர், கவிஞர், பாடலாசிரியர், First Audio காற்றலையின் மிக நல்ல நேயமிக்க "துணிச்சல் பெண்", ஜெயா நடேசன் அவர்களுக்கு எங்கள் யாபேரினதும் நல் வாழ்த்துக்கள்.
இன்னும் அவர் சாதனை தொடர வேண்டும். விரும்பிய வாழ்வு தொடர வேண்டும்.
லண்டன் தமிழ் வானொலி + பாமுகம் + FA TV நேயர்கள் சார்பாக..

- நடா மோகன
( First Audio - அதிபர் )
www.firstaudio.net
info@firstaudio.net
+44 (0) 7956 256636

# மனிதநேயம் படைத்த நல்ல மனிதர்!

தமிழீழம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனி காவிஸ்பேர்க் நகரில் பல காலாகாலமாக வாழ்ந்தவர் அமரர் க .யூட்-நடேசன். தூய உள்ளம் படைத்த இவர் மிகவும் பண்பானவர், அன்பானவர் எல்லோருடனும் பழக இனிமையானவர். இவரின் துணைவி திருமதி.ஜெயா-நடேசன் அவர்களின் குடும்பத்தவர்கள் எங்களோடு 25 வருடங்களுக்கு மேலாக தொடர்புடையவர்கள். கல்வியிலும், தாய்மொழியிலும், தாய்மண்ணிலும் சமூகசேவையிலும் இவர் குடும்பத்தவர்கள் மேம்பட்டவர்கள். புகழ்படைத்தவர்கள். கடந்த 20 வருடங்களாக ஜேர்மனியில் வெளிவரும் "மண்" கலை இலக்கிய சஞ்சிகையோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். "மண்" சஞ்சிகையின் எல்லா விழாக்களிலும் குடும்பமாக கலந்து கொண்டு ஒத்துளைத்தவர்க, உதவி புரிந்த்தவர்கள், சிறப்பித்தவர்கள்.

திருமதி. ஜெயா- நடேசனின் அவர்களின் எழுத்தாற்றல் பரிணமித்து புகழ் சேர்க்கவும், கட்டுரை,கவிதைகள், சிறுகதைகள் எழுதிப் பாராட்டும், பரிசில்களும் பெற்று புகழினைச் சேர்த்தவர். ஜேர்மனியில் எங்கு தமிழ், சமய விழாக்கள் நடைபெற்றாலும் முன்னின்று உழைப்பவர்கள் .எல்லோரையுமே சந்தோ'ப்படுத்துவார்..

இவர் மொழிப்பற்று, மண்பற்று, மிக்கவராக இருந்தாலும் ஜேர்மனிய மக்களுடனும், பிறநாட்டு மக்களுடனும் நட்பாகவும்,பண்பாகவும் வாழ்ந்து காட்டினார். ஜேர்மனி தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியத்தினதும், ஜேர்மனி முன்ஸ்ரர் பகுதி தமிழர் கலை கலாசார விளையாட்டுக் கழகத்தினதும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு உழைத்தவர்.அத்தோடு மண் சஞ்சிகையால் நடாத்தப்பட்டு வரும் தமிழீழ அனாதைச் சிறுவர் பராமரிப்புத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கி ஆலோசனை வழங்கி தாயகத்தில் அவதியுறும் மக்களின் கண்ணீரைத் துடைக்க மனிதநேயத்துடன் உதவினார். எம்மோடு ஒன்றுபட்டு நேசக்கரம் நீட்டி வாழ்ந்தார். மகிழ்ந்தார். அமரர் நடேசன் அவர்கள் மனிதநேயம் படைத்த உத்தமர். புன்முறுவல் பூத்த தொண்டன். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற சிந்தனை படைத்த இந்த மாண்புமிகு மனிதருக்கு மனைவி ஜெயா.நடேசன் லண்டன் தமிழ் வானொலிக்கு தான் எழுதிக் குவித்த கவிதைகளில் 51 கவிதைகளை "அர்ச்சனை மலராக" அர்ப்பணம் செய்வதை நானும் மனதார வாழ்த்தி அன்னாரின் ஆத்மா சாந்திபெற மண்சஞ்சிகையின் வாசகர்களோடு இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

திரு.வ.-சிவராஜா
(பிரதம ஆசிரியர் -மண் சஞ்சிகை-)



POETE KANNATHAASAN MANTRRAM


## வாழ்த்துரை

“அர்ச்சனை மலர்கள்” எனும் தலைப்புக்கொண்டு தன்னுடைய வாழ்வில் தான் சந்தித்த கற்றுத்தேர்ந்த உணர்வுபூர்வமான தன்னுடைய இல்லற வாழ்வில் நேர்ந்த உண்மைச் சம்பவங்களையும் இல்வாழ்வில் கண்டறிந்த அனுபவங்களையும் கவிதை வடிவில் தொகுத்து மற்றவர்களுடனும் வருங்கால தமிழ் இனத்தினர்க்கு இந்தக்காலகட்டத்தில் நடந்தவைகளை அறியச்செய்யுமன் ஒரு பணியாகவே திருமதி ஜெயா நடேசன் (பாக்கியம்) அவர்கள் இந்த அர்ச்சனை மலர்கள் எனும் கவிதைத்தொகுப்பை தொகுத்துள்ளார் என்றே உணரத்தோன்றுகின்றது. குறிப்பாக அப்பாவின் நினைவில் என்பது குழந்தைகளின் அனுபவமாகவும் என் மற்றத்து மல்லிகை நீங்காத நினைவுகள், உறவின் உயிராக, என்சொத்து போன்றவையும் இன்று புகலிடத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிலமையை மறைந்து போன மனிதம், புகலிடத்தமிழ் போன்றவையும் தனது தமிழ் உணர்வை எரிந்த நூலகம் அடையாளம், போன்றவையும் உணர்த்தும் தனது அனுபவமாக பெண்விடுதலை, திரும்பிப்பார்க்கிறேன், ஏன் கல்லறை போன்றவையும் உணர்த்துகின்றன. வாழ்க்கையின் அனுபவம்தான் கவிதையாக வரும் என்பார்கள். தமிழ் மரபில் தன்னுடைய சமுதாய உணர்வை சமுதாய அக்கறை கொண்டவர்கள்தான் பதிவு செய்வார்கள் கல்வியறிவு என்பது கற்றதினால் மட்டும் வந்துவிடாது சொற்சுவையும் பொருட்சுவையும் உள்ளதாக எழுத்து அமைந்தால்தான் படிப்பவர்களுக்கு தமிழ்ச்சுவையமையும்.

*கற்றதனால் ஆய பயன் என்கொல்வாலறிவன்*
*நற்றாள் தொழார் எனின் எனும்*

வள்ளுவன் வாக்கை நன்குணர்ந்தவனாக திருமதி. ஜெயா நடேசன் தன்னுடைய முன்னோர் காட்டிய வழியில் இதுவரை பல வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும் பல மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும் கவிதைகள் பாடி வரும் இந்த நேரத்தில் அர்ச்சனைப் பூக்கள் எனும் இந்தக் கவிதைத்தொகுப்பை வெளியிடுவது மேலும் அவரது தமிழ் உணர்வை மேம்படுத்த உதவியாக இருக்கும் என்பதை உணர்ந்து கவியரசின் பூர்ணமான அருளாசி இவருக்கும் கிடைக்க வேண்டும் என்று இறையருள் வேண்டிப்பிரார்த்தித்து மேலும் இதுபோல் பல எழுத்துருவாக்கங்கள் தர இவர் முன்வரவேண்டும் என்று வாழ்த்தும் தெரிவிக்கின்றது கவியரசர் கண்ணதாசன் கலையரங்கம் பிரான்சு.

அன்பே தெய்வம்
ம. இரவீந்திரநாதன்
தலைவர் கவியரசர் கண்ணதாசன் கலையரங்கம் பிரான்சு

## அப்பாவின் பிரிவை மறுத்து எழுதுகின்றோம் பிள்ளைகள் நால்வரும்....



எங்களுக்கோர் அன்புத் தந்தை
பண்பான குணமான அழகான
ஒருவராய் கிடைத்ததே,
நாம் செய்துள்ள பெரும் புண்ணியமே!

இது பிரியாத உறவு ஒன்றின்
சொல்லிமாளாத துயர் பகிர்வு
மெல்லவும் முடியாமல் சொல்லவும் தெரியாமல்
நெஞ்சைப் பிழியும் பாசத்தின் பிரிவு
எங்களை உச்சத்தில் ஏற்றிய ஏணியின் சரிவு
வளர்த்தெடுத்த பாசத்தின் இழப்பு
மூத்தவள் எனக்குள்ளிருந்து வெளிக்குமுறும்
வார்த்தையின் ஓலங்கள்
குலவிளக்கை ஏற்றிட வந்த மூத்தவளென்று
அகிலத்தில் நற்பெயரெடுக்க என்னையாத்து
காத்து உயர்த்தியவருக்காய் கண்ணீர் மாலை
சாத்துகிறேன் உயர்கல்விக்காக நான் தூர இடம்
போனபோது மூச்சுக்கு முன்னூருதரம் பேசிடும்
அப்பாவின் நினைவுகளை எங்கே புதைப்பது
நொடிகூட பிரிந்தாலும் என்மனம் வாடுமே
என்றறிந்து வைத்திய தொழில் பயிற்சி
முடியும் வரை காத்திருந்தீரே!
என்வருங்கால வாழ்வுக்காய் எதிர்நோக்கி இருந்தீரே!
இனி உங்கள் வரவை எங்கே எதிர்பார்ப்பது,
உங்களின் நினைவுகளே என்றும் என்னுடன்
இரண்டாவது மகளானபோதும் வரண்டுவிடாமல்
திரண்டு வரும் பாசத்தை வளர்த்தவர் வாழ்க்கை பூந்தோட்டமா?
அன்றி போராட்டமா! மருத்துவ தாதியாக படிக்கவிட்டு என்விழிகளாய்
நீங்கள் இருந்தவரை பாதைகள் கரடு முரடோ தெரியவில்லை. காலக்களாக
இருந்தவரை இலை தளிர்காலத்தை பெறமுன்னரே இலையுதிர் கால்ததோடு
போனீரே! மகிழ்வுகள் பூப்பதை பார்க்காமல் பரலோகம் சென்றீரே!
என்றும் உங்களின் நினைவுகள் எம்முடனே!

முக்கண்ணைத் திறந்தவருக்காய்
மூன்றாவது மகள் ஆகிறேன் மகன்
நான் என்பதைவிட என்னை குகனாக பார்த்தவர்.
தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பர், ஆனாலும்
என்தோளினிலே சுமையை ஏற்றவில்லை தேரோட்டிப்
பார்த்த மகனாக எனக்கருகில் இருந்து கார் ஓட்டும்விதம்
சொன்னீரே! பார்போற்றும் உங்களை பார்த்திருக்க வலி சொல்லவில்லையே
என்றும் அப்பாவின் நினைவுடனே-
கடைக்குட்டி என்பதால் கடைசிவரை உங்களின் செல்வமகாக
வாழ்ந்தவள் நொடியேனும் பிரியவிடாது விடைதர மறுப்பாரே.
கலைகளுக்காக விலையேதும் கொடுக்கத் தயங்காதவரே!
பரதம் நான் பயின்றிட வேண்டுமென்பதே அவர் விரதமானது.
அதற்காகவே பகல் இரவு பாராது தூரங்களைத் தாண்டியவர்
எங்கு என்பாதங்கள் அரங்கேறினாலும் உங்கள் பார்வைகள்
ஆவலாய் எதிர்பார்த்திடுமே.
பூவுலகில் வாழும் மானிடர்களின் முடிவோ மண்ணோடு
சேருமென்று நான் ஏற்கப் போவதில்லை. எனது சலங்கை
ஒலியினிலே முழங்கும் அம்மாவின் கவிதையினிலே.
நான் ஆடும் பாதத்திலே, அக்காமார் பாடும் கீதத்திலே
அண்ணாவின் உடையிலே, நடையிலே நிமிடங்கள் தோறும்
நினைவுகளாய் பிரிவை மறுத்து எழுதுகிறோம் பிள்ளைகள்
நால்வருமே!

உங்கள் கல்லறைக்கு ஒளியேற்றி மலர்தூவி வணங்குகிறோம்.
எங்கள் அம்மாவின் "அர்ச்சனை மலர்" அர்ப்பணமாக வாழ்த்துகிறோம்.

பிள்ளைகள்.

ஆன். கேமாலினி
ஆன். பிறேமாலினி
ரெஜி. நிசாந்தன்
ஆன். விநோலினி

திருமதி.ஜெயா நடேசன் அவர்களின் கவிதைத்தொகுப்பு.

## அர்ச்சனை மலர்கள்


1. நீங்காத நினைவலைகள்.
2. அப்பாவின் நினைவில் ...
3. உறவின் உயிராக...
4. கனவுகண்டேன் .
5. என்முற்றத்து மல்லிகையே!
6. இயற்கையில் இறைவன்.
7. இதயத்தில் இவளா?
8. என்றும் என்துணை இவர்களே!
9. ஏன் கல்லறை?
10. விடிவுபெற.
11. அடையாளம்.
12. திரும்பிப்பார்க்கின்றேன்.
13. முற்றுப்புள்ளி.
14. புகலிடத்தமிழ்
15. இசைபாடு.
16. ஒருதாயின் குமுறல். .
17. மறைந்துபோன மனிதம்.
18. பெண்விடுதலை.
19. பொய்யில்லாப்பொய்கள்.
20. அதுவும் இதுவும் .
21. சேமிப்பு.
22. முதுமையின்ஏக்கம் .
23. கடல்த்தாயே!
24. உலக இறைத்தந்தை தனிநாயகம் அடிகளார்.
25. எப்படி மறப்பேன்?
26. பாரதி இன்றிருந்தால்.......
27. எம் பருவகாலங்கள்.
28. வலைக்குள் வையகம்.
29. அகங்களும் முகங்களும்.
30. ஆடியின் வியப்பில் ...
31. வானுயர்ந்த பெருமாட்டி.
32. இன்பக்கழிப்பில்......
33. எரியுண்ட யாழ்நூலகம்.
34. உறவின் முடிவில்
35. மகிழும் மார்கழி.
36. என்சொத்து..
37. படிகள்.
38. அன்னைபாக்கியம்
39. ஆசைமுகம்
40. என்ஆசை.......நிறைவேறுமா?
41. தேடினேன்.
42. விடிவெள்ளி.
43. திருப்பம் வேண்டாமோ?
44. அழகோ ..... அழகு.
45. இயற்கையின் வனப்பிலே!
46. சிந்தித்தால்.........சிரிப்புவரும்.
47. ஓர் ஆத்மாவின் தேடல்........
48. மறந்தது எப்படி?
49. சகுனம்.
50. அம்மாவின் ஏக்கம்
51. என் சொத்து.

# நீங்காத நினைவலைகள்

நேற்று நடந்தவை அனுபவமாக
இன்று நடப்பவை நல்லவையாக
நாளை நடப்பவை அறியாதவையாக
நாட்கள் நகர்வதே வாழ்வின் வரலாறு

எம்வாழ்வின் போதாத காலமா
எம்நினைவின் அழியாத கோலமாய்
2004 ஜனவரி 28ம் தேதியில் -இப்
பொல்லாத சரித்திரம் படைத்ததும் ஏனோ?

தஞ்சம்கோரி வந்த இம்மண்ணில்.....
நெஞ்சம் பிளந்து நெடுந்துயர்மாள
சிந்திக்கமுடியாச் சிறையினைத் தந்து
சென்றது எங்கே? சென்றது எங்கே?

நெஞ்சம் துடிக்குதையா நிம்மதியும் தொலைந்ததையா
கொஞ்சும் உம்முகந்தான் கூடவே வருகுதையா
பிரிந்த உம்நினைவு தினம் எம்நெஞ்சை சுடுகிறதே!
வருத்தி எம்மை என்றும் வாட்டி எடுக்கிறதே !

இருந்தும்......
உற்றவர் பெற்றவர் உறவுகள் மறந்து
மற்றவரால் பெற்ற துயரங்கள் கழைந்து
உம்முகம் மறையா எம்மனங்களில் ஏற்றி
எமக்குள்ள சோதனைகளை வெல்வதற்கு
இறைவனை இருகரம்கூப்பி வேண்டி இவைதனை
**அர்ச்சனை மலராக்கி** அர்ப்பணம் செய்கின்றோம்.

## அப்பாவின் நினைவில்.....



அன்புள்ள எம்அருமை அப்பாவே!
உம்மோடு வாழ்ந்த நாட்களை நினைவுகளை
நாம் திரும்பிப் பார்க்கின்றோம்-தினந்தினம்
திரும்பிப் பார்க்கின்றோம்.

எம்மீது அன்புமழைபொழிந்து வாழ்ந்ததில் நீங்கள்.... மேகம்
உங்கள் சிரிப்புமுகத்தில் நாம் கண்டதில்லை...... சோகம்
நோயுற்ற வேளையிலும் துவண்டு விழவில்லை உங்கள்......தேகம்
நீங்கள் அன்பு அப்பாவாக எமக்குக் கிடைத்ததே..... பெரும்யோகம்

உங்களிடம் நாம் பெற்றுக்கொள்ளவில்லை வெறுப்பு
எங்கள் தேவைக்கு நீங்கள் கூறியதில்லை மறுப்பு
நீங்கள் எம்மை அன்புகாட்டி வளர்த்ததோ சிறப்பு
எம்மால் தாங்கமுடியவில்லை உங்கள் இறப்பு

அப்பா நீங்கள் நல்வழிகாட்டி வளர்த்தீர்கள் மண்ணில்
குறைவின்றி வாழவிழிப்புடன் இருந்தீர்கள் கண்ணில்-உங்கள்
நிறைவாழ்வில் ஆன்மீகமே புரிந்தீர்கள் பொதுப்பணியில்
இன்று இறைவன் பாதமதில் வாழுகின்றீர்கள் விண்ணில்

மண்ணில் எங்கள் அருமை அப்பா நீங்கள் நின்று
விண்ணில் வானகத் தந்தையிடம் அமரச்சென்று
கண்ணில் காணக் கரைந்ததுவே வருடம் பத்து
எண்ணில் அடங்கா கண்ணீருக்குள் நாம் ஐவர் என்றும்.

# உறவின் உயிராக......



அன்புள்ள என் அப்பாவே-ஆசையில் ஓர்கடிதம்
நான் என் மை கொண்டு எழுதுவது என்னவென்றால்
உங்களின் நான் ஒன்றாக உயிரே நீர் என்றாக
உங்கள் நினைவே சொல்லாக செயலாக எம்மில் வாழ்ந்து
உறவோடு உயிராக உரித்தாகி வாழ்க்கைப்பட்டு..

முதலாகி முடிவாகி முழுதாகி அன்பாகி வளர்ந்து
முத்தான பிள்ளையாக்கி மொத்தத்தில் பலதாக்கி
இனிதாகக்கனியாக அருள்வாழ்வில் நிறைகாண
சேய்பல காத்திட்டு தாயும் தந்தையுமாய்
ஒளியாகி மிளிர இருள்போக்கி எம்வாழ்வில்
நிறைவோடு அன்பாக நெஞ்சிலே நிலையாக
என்றும் நினைவில் நிற்கும் என்அன்பின் உயிரே!

நீர் அங்கே நான்இங்கே எம்நினைவுகள் ஆங்காங்கே
எம்மைவிட்டுச் சென்றது நீர் எங்கே?
மண்ணுலகைத் துறந்து இறைவனடியில் ஆனந்தத்துளியில்.....
உற்றவர் கொற்றவர் கற்றவர் சுற்றத்தவர்
என்றெவர் உயிரில் மிஞ்சிடார் யாரும்உண்டோ?

பொத்தி பொத்தி சேர்த்துகாத்தவை எல்லாம்
பத்தே நொடியில் கைவிட்டுப்போனதையா
நித்தமும் சிறுதொகையை உம்நினைவாகவே
நோய்கண்டோம் இறந்தோம் என்ற செய்தி கேட்டு
நிமிடங்கள் தோறும் இறந்தே வாழ்கின்றோம்

என்றும் எம்முடன் விளைந்த விளைப்பயிரே!
எமக்கு ஆணிவேராக நின்றஉறவே அறுந்து போனதே!
வாழ்க்கை உறவைத் தொலைத்து விட்டு வருந்துகின்றோம்
நீர் விண்ணுலகில் ஆங்கே -நாம் மண்ணுலகில் இங்கேயாக.

# கனவுகண்டேன்

கனவில் ஒரு வெள்ளைப்புறா வானில் கண்டேன்
நினைவில் அதை நிறுத்திக்கொண்டேன்
சமாதானப்புறாவாக தூயஆவியின் வல்லமையென
உள்ளத்தில் உவகை கொண்டேன்

கண்ணில் தெரியும் வண்ணமலர்கள்
என்னில் மணம் பரப்பக்கண்டேன்
மின்னிமறையும் துன்பங்கள் பலதும்
காற்றில் பறந்து செல்லக்கண்டேன்

இருட்டுக்கள் வெளிச்சம் தேடுதலைக்கண்டு
பலர் புகழ்சேர்க்கும் புதியபாதை கண்டேன்
பகமையை ஒழித்து பாசங்கள் அனைத்தும்
பொழிபவரைப் பாரினில் கண்டேன்
ஆதரவு அற்றவனைஅன்பு செய்தலைக் கண்டேன்
இருப்பதைப் பகிரவும் கண்டேன்

துன்பத்தில் தோள் கொடுப்பதற்க்காக சிலர்
உதவிக்கரம் நீட்டுவதையும் கண்டேன்
வாழ்வில் பனிமழை பரவலாகப் பெய்து
பலர் பாசமாய் கைகூப்பக்கண்டேன் -அதுவே
உலகையே மறந்த நிலை கண்டு
சிலர் சுடும்நிலையும் நிறையக்கண்டேன்

உலர்ந்துபோன இதயங்களில் ஈரம் கனியக்கண்டேன்
போராட்ட உலகமதில் புதுவித உலகமதில்
புரட்சி விதை புதைக்கக்கண்டேன்
விதைக்கப்பட்டது விழுதாகவே எதிலும்
உப்புச்சப்பற்ற வாழ்க்கையின்நிலை கண்டேன்

# என் முற்றத்து மல்லிகையே!

என்வீட்டு முற்றத்தில் மணம்வீசும் வாசனையில்
மல்லிகைமலர்கள் மலர்ந்து விரியக் கண்டேன்
அழகாக முற்றத்து உயர்ந்த பந்தலிலே
அமைதியாக் சாய்ந்து கிடந்தனஅவை.
சிலது மடிந்து வாடிப்போயிருப்பதை
பார்த்துக் கண்ணீர் வடித்தேன் ஆனாலும்
பந்தலைப்பார்க்க வெள்ளை வெளிரென
மிக அழகாக கெம்பிரித்து இருந்தன மலர்கள்
தேவைக்கு மீறிபந்தலிலுள்ள அம்மலர்கள்
என்இதயத்துடன் பேசிக்கொண்டன...........

சுத்தமான அழகான நறுமணமலரே!
நீ என்அழகான வீட்டுப்பந்தலின் சொத்தன்றோ.
அதனால் உன்இயல்பே அழகாக இருக்கின்றது
என்ற அர்த்தத்தில் கோயிலுக்கு காணிக்கையாக
பெண்கள் கூந்தலுக்கு அலங்காரமாக
கல்லறைப்பூக்களாயும் பறிக்கப்படுகின்றாய்
நீ தோட்டத்துப் பூக்களாகவில்லை
தெருவோரத்துப் பூக்களாகவில்லை
யன்னலோரத்துப் பூக்களாகவில்லை
முற்றத்துபந்தலில் மல்லிகைக் கொடியானதாலே
உன்னைக்கண்டு யாவரும் மயங்கி விட்டனரோ?

மல்லிகைப்பூவினிலே புதுக்கவிதை பாடுகின்ற
நம்தேசத்து வண்ணத்துப்பூச்சிகளும்
உருமாறி உணர்வுபொங்கி மாறியதே
முற்றத்து பந்தலிலே சிரிக்கின்ற வெள்ளைப்பூ வாழ்த்துது
என்கணவர் நாட்டிவைத்த அந்த மல்லிகைப்பந்தல்
நாம்பார்க்கும் போதெல்லாம் அவரின் நினைவுகள்
மறக்கமுடியுமா அன்றய அந்த ஞாபகங்களை

# இயற்கையில் இறைவன்

மக்களை மக்களாய் இப்பூவுலகில் படைத்து
புல் பூண்டுசெடி கொடி ஆறு கடல் குளம்
நிலத்திலும் நீரிலும் வாழும் அனைத்து ஜீவராசிகள்
அண்டவெளியை அழகுசெய்யும் நட்சத்திரங்களை
பகலவனை வெண்ணிலாவை எல்லாவற்றையும்
மனதிற்கு அழகாகப் படைத்தனன்

வண்ண வண்ணப் பூக்குவியல்கள்
பிரசவவேதனையுறும் மலர் மொட்டுக்கள்
துளிர்த்துக் கிளம்பும் தளிர்கள்
அவற்றில் முத்துமுத்தான பனித்துளிர்கள்
நீரூற்றாய் நீரோடையாய் அருவியாய்
ஆறாய் பாய்ந்துவரும் வெள்ளக்காடாய்
எங்கும்நிரப்பி மனிதமனங்களை நிறைவுசெய்து
குளிரச்செய்யும் வண்ணமே படைத்தனன்

மண்ணையும் வயல்வெளிகளையும்
தோட்டம் துரவுகளும் பூஞ்சோலைகளும்
உச்சிக் கொப்பில் மொட்டு மலராய் விரிய
வர்ணநிற வண்ணத்திப்பூச்சியும் வண்டினங்களும்
ரீங்காரம் செய்து மலருக்கு மலர்தாவி மண்டியிட்டு
மகரந்தச்சேர்க்கை செய்து தேன்சேர்த்து இனிமையாக்கும்
வண்ணத்தையும் இறைவனே படைத்தனன்

சிறியபெரிய வர்ணமான மீனினங்களை படைத்து
இவற்றையெல்லாம் உயிர்களுக்கு உணவாக தந்தது
இறைவன் படைத்த இயற்கையின் நியதியே! நியதியே!!
இவ்வண்ணமாய் இயற்கையின் ஊடே நானும்
இறைவனைக்கண்டு கொண்டேன். தினந்தினம்

# இதயத்தில் இவளா?



திருமதி. மேரீதிரேஸ் அமிர்தம்

கருவறை தொடக்கம் கல்லறைவரை
இன்பத்திலும் துன்பத்திலும்
இரண்டறக்கலந்த இதயத்தெய்வம்
என்அன்னையவள் திரேசாஅமிர்தம்.
தனது நிஜமான சுகத்தை மறந்து
என்கண்முன் நிழலைக்கூட அள்ளி எடுத்து
பாதுகாத்தவளே என்னைப் பெற்ற தாய்
உனக்குஇடாக இவ்வையகத்தில் எவருமே இல்லையம்மா

கருவறையில் ஈரைந்து மாதம் பத்திரமாக
காவலில் வைத்து சுமந்தாயா?-அல்லது
உன்கருவறைக்குள் வைத்துக்க காவல் புரிந்தாயா?
அன்பின் இருப்பிடமாய் அரவணைப்பின் சிகரமாய்
வாழ்வின் சரித்திரமாய் வாழவைத்த தெய்வம் நீயம்மா

உணவை ஒறுத்து உடலை வெறுத்து
பாலூட்டி சீராட்டிய பரிவுமிகுந்த உன்பாசத்தின் முன்னால்
சூரியன்கூட சுருங்கி விடும் மனம் நொந்துபோனால்.....
மாளிகைகூட மண்குடிசையாகத்தான் மிளிரும்?
பெற்றபெரும்அருளினால் வளமூட்டினீர்கள் வாழ்வதற்கே
ஆன்மீகப் பெரும்இறைஞான அனுபவங்களை
பகுத்தளித்தீர்கள் பக்குவமாய்

சோர்ந்தபோன என்மனதுக்கு உற்சாகம்தந்து
உதவிய ஊன்றுகோலே என்தாயே!
தன்மானத்துடன் தலைநிமிர்ந்துவாழ
வாழிகாட்டி ஒளிகாட்டிய ஒளிவிளக்கே!
அன்பாலே அரவணைத்து மார்பில்தாங்கிய உன்னை
தினந்தோறும் இதயத்தில் வைத்துஇன்னிசையாய்
புகழ்பாடி உளமார அஞ்சலி செய்கின்றேன்

## என்றும் என்துணை இவர்களே!

வாழ்வை நாமென்ன கேட்டா வாங்கினோம்?
எம்மைக் கேட்காமலேயே-எமக்குத் துணைநின்று
எம்மைஆட்கொண்டு வாழ்வைத் தந்து
பிழைத்துவாழ துணைதந்து இங்குஅழைத்தவன் இறைவன்
எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் எங்கள் இறைவன்
அருள் செய்து துணைவருவார் என்றுமே!

நல்லதுகிடைக்க வரமே கேட்டேன்
நானிலம் வாழ்ந்திட அன்புசெய் என்றேன்
புவியில் வாழும் நிலைமையும் பாதையும் தா என்றேன்
வாழ்வை இலகுவாகச் செலுத்த உதவும் என்றேன்-சிலவேளை
கடினமானதாகத் தென்பட்டாலும் இறைவனே துணைவருவார்

என்னுயிர்த்தோழியாய் உயிர் உள்ளவரை -ஆலமரமாய் விழுதுவிட்டு
பள்ளி வயதுமுதல் இன்றுவரை வளர்ந்த அவள்அன்பினால்
சோக இரவுக்குள்ளும் கவலைத்திரைகளிலும் இதய யன்னல்களில்
வந்ததோழியே எனக்குத் துணைவருவாள்

நான் அன்றுசெய்த உதவிகள் பெற்ற உறவுகள்
என்க்கு நேர்ந்த இருள்சூழ்ந்த துயரமதில்........
தாங்கள் பக்கபலமாக இருப்பதென தெரிவிப்பதினால்
அவர்கள் என்றும் எனக்குத் துணையிருப்பர்.

எல்லையில்லா அன்பாலே நான்பெற்றெடுத்த பிள்ளைகள்
கல்லும் கரைந்தெழுகும் வற்றாத கருணையில்
நான் சுகநலத்துடன் இருக்கவேண்டி அழகான வாழ்வில்
என்பக்கத்தில் அவர்களே துணையிருப்பர்கள்.

# ஏன் கல்லறை?

பாரினிலே பலர் பிறப்பதுண்டு பலர் இறப்பதுண்டு
இறப்பினின்று பிறப்பது இறைவாழ்வு
மனிதன் மரணத்தை தழுவிக்கொள்வதில்லை
மரணம் தான் மனிதனை தேடிவருகின்றது

இறந்தோர் கல்லறைகள் -வாழ்வோரின் கல்லறைகள்
கல்லறையில் புதைக்கப்படுவோர் -மீண்டும் உயிர்பெறுவர்
நெஞ்சில் என்றும் நினைவில் இருப்பர்
இறைவன் திருவடியில் என்றும் அமரராய் இருப்பர்

பிரிந்தவர்களை நெஞ்சில்நிறுத்தி அழுதுபுலம்புவர்
மறக்கமுடியாமல் தவிப்பர் அவர்கள்
கல்லறையில் அடக்கப்பட்டவர்கள்
ஆனால் அடங்கி விடவில்லை

உயிர் அழிந்துவிட்டாலும் அவர்கள்
விட்டுச்சென்ற சிந்தனைகளை
பாசத்தை ஆசைகளை நினைவில் நிறுத்தி
கல்லறைப்பூக்கள் செய்வதே சிறப்பு.

அது ஒவ்வோர் குடும்ப உறவினர்களும்
உற்றார் உறவினர் அன்பு உள்ளங்களிலும்
அஞ்சலி செலுத்துவதே மலர்தூவி
வணக்கம் செலுத்துவதே உண்மையான செய்நன்றியாகும்

நேசம்மறவாத நினைவாக அவர்குடும்பம் இருக்கும்
என்றோ ஒருநாள் அவர் உலகினிலே
ஒன்றாக அன்புக் கோபுரத்தில் சந்திப்பர்
அவர்களின் ஆன்மா நித்தியம்பெற பிரார்த்திக்கின்றோம்.

## விடிவு பெற.

காலமென்றும் சுழல்சக்கரம்
என்னைக் கண்ணீரில் ஆழ்த்தியபோது......
கரைஒதுங்கும் படகுபோல்
என்பயணம் தொடர்ந்த வேளை..
இடைநடுவே வந்த இடுக்கண்ணால்
என் எதிர்காலம் தடுமாறியபோது........
என்உறவுகள் பிள்ளைகளை
விட்டுப்பிரிந்து கண்ணீர் கவலையுடன்
தனிமரமாய் வாழ நேர்ந்தது
உறவுகளின் பாசநெருடல் என்னைப்
பரிதவிக்க வைத்தபோது.......
என்மனதை பலரின் நற்புத்திமதிகள்
துணைநிற்க திடமாக்கிக் கொண்டேன் .

என்னோடும் பலஉறவுகள் இனம்புரியாத அனபர்களாய்
என்னுடன் வாழ்வதைக் காண்கின்றேன்
என்புலனுக்கு வேலை கொடுக்கின்றேன்
என்மனது துடிதுடிதுப் போகையிலும்
என்உணர்வுகள் தென்பூட்டும்
இணையம் வானொலிமுலம்
பலரை பலதை அறிந்துகொண்டேன்
உறவுகள் போல் பாசம் வைத்தேன்
நட்புறவுகளை வளர்த்துக் கொண்டேன்
இவ்வாறுபொழுதுகள் கழிகின்றன.

இருந்தும் என்மனம் தடுமாறிப் போவதுவுமுண்டு
பலகேள்விகள் என்மனதில் வந்துபோகும்
தென்றலாய் விசிய எம்வாழ்வினிலே
ஏனிந்த சோகம் வந்ததென்று
ஒருகணம் எண்ணிப்பர்க்கின்றேன்.

எனதுவாழ்வில் விதிவந்து விளையாடியதாவென
என்மன எண்ணங்கள் மதியோடு வாதடியது
இதில் யார் வெல்லப்போவதென வினா எழும்ப
விடைய்யும் கிடைக்கவில்லை இருந்தும்
என்றும் இறைவன் கரம் கொடுத்து தூக்கிவிடுவான்
என்றுநம்பி தொடர்கின்றேன் என்வாழ்வுப்பயணத்தை..

# அடையாளம்



கருவறையில் கண்ணுக்குத்தெரியா
ஒருசிறுபுள்ளியாய் கருவிகொண்டு
அடையாளப்படுத்தி விடலாம்- ஆனால்
கையால் தொட முடியாது

எம்புள்ளியை வைத்தது எம்பெற்றோர்
புள்ளியை ஒருசிறுமழலைப்பிள்ளையாய்
வளர வைத்தது இறைவன்-அதை
இந்தப் பூவுலகத்திற்குக் கொண்டு வந்தவள் தாய் .

பிறந்ததும் அடையாளம் கண்டுகொள்ளாத
மழலைக்கு பெயர் வைத்தவர்கள் பெற்றோர்.
உறவினர்களும் அப்பெயரைச் சொல்லி அழைத்தனர்
அறியாப்பருவமதில் நானும் அதனை நம்பி வாழ்ந்தேன்

சிறுவயதில்கூட புகைப்படத்தில் என்னை
எனக்கு அடையாளம் தெரியவில்லை
அதன்பின் வளர வளரவே- நான்
அம்மாவை அடையாளம் கண்டுகொண்டேன்
அப்பாவையும் அறிந்துகொண்டேன்

அதன்பின் உலகிற்கு என்னை அடயாளப்படுத்த
அடையாள அட்டை தந்து உதவினார்கள்.
ஆண்டவன் படைப்பில் வந்தஎன்னை
அடையாளப்படுத்த தேவை எத்தனைதான்?

எம்இதயத்து மொழியை புரிந்தவரே
எம்இதயத்தில் இடுவர் அடையாளம்
கருணையின் அதிர்வுகளை உணர்ந்தவரே
கடவுளை அடையாளம் கண்டு கொள்வர்.

# திரும்பிப் பார்க்கின்றேன்

தாயக மண்ணில் முற்றத்துமணலிலே
மண்வீடுகட்டி கெந்தி விளையாடி
ஒழித்துப்பிடித்து ஓடியாடிய அந்நாட்களை
திரும்பிப் பார்க்கின்றேன்

அன்னையவள் அம்புலிமாமா காட்டி
பூச்சாண்டி வருகுது எனபயமூட்டி
அழஅழ அமுதூட்டிய அந்த நாட்களைத்
திரும்பிப்பார்க்கின்றேன்

தென்னைமரமேறி திருட்டுத்தனமாக
குலையாக இளநீரும் வழுக்கல் கலக்கி
கெலிதீர அடிபட்டுக்குடிப்பதிலும்சண்டைபோட்டு
அம்மாவிடம் அடிவாங்கிய அந்த நாட்களையும்
அதில் கிடைத்த மகிழ்வும் ................அப்பாடா
அந்நாளில் நினைவலைகளை -திரும்பிப்பார்க்கின்றேன்

பள்ளிப்பருவத்திலே புளியங்காய்க்கும் விளாங்காய்க்கும்
புளியமரத்திற்கும் விளாமரத்திற்கும் கல்லெறிந்து
அயலவர் வந்து அப்பாவிடம் முறையிட்டு
அம்மாவிடம் அகப்பைக்காம்பால் அடிவாங்கி அழுத
அந்நாள்நினைவுகளை -திரும்பிப்பாபர்க்கின்றேன்
காதலித்து அவருடன் பழகிய நாட்களை
மணம்முடித்த அந்த இனிய நாட்களை வாழ்வை
திரும்பிப்பார்க்கின்றேன் - மீண்டும் திரும்பப் பார்க்கின்றேன்.

நாடுவிட்டுநாடுவந்து சொகுசானவாழ்வினிலே
வாழ்வுநடாத்தும் நம்மவர்களின் நிலைதனை -தம்
நினைவுகளை நினைவுகூருவார்களோ வென
திரும்பிப்பார்க்கின்றேன் மீண்டும் திரும்பப்பார்க்கின்றேன்
அத்தனையும் பசுமைநிறைந்த எம்தாயக நினைவுகளல்லவா ?

# முற்றுப்புள்ளி



இந்நேரம் இத்தலைப்புக்கு நான் கவிபாட
காதுகொடுத்து செவிசாய்க்க
நினைவான நினைவுகளின் நினைவுகளை மறக்க
மனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றேன்

பட்டதுன்பங்கள் வலிகள் முற்றுப் பெறட்டும்
தொட்ட தேடல்கள் தொடரட்டும்
சாய்ந்த உடல்கள் சாதித்த கொள்கைகள்
வந்துதந்து சென்ற செய்திகள்
எல்லாமே எனது நம்பிக்கையே.

மனக்கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்
அவமானத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தேன்
பார்த்த ஆபாசங்களுக்கும் அவாப்பட்ட
செய்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தேன்

முடிவெடுக்க வேண்டிய தருணத்தில்
நல்லமுடிவெடுக்க வேண்டிய தருணத்தில்
முடிவெடுக்க மறுத்ததால் முற்றுப்பெற்றன யாவும்
அந்தமுகவரி அற்ற தோற்றங்களுக்கு
முற்றுப்புள்ளி வைப்பதால்........................
மாற்றம் பெறட்டும் பெற்றும்விட்டது
எம்வாழ்வின் நல்வாழ்வு வாழ்வதற்கே.!

# புகலிடத்தமிழ்

*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்*
*பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சி சொல்லப்பாண்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திருதல் நன்றோ சொல்வீர்*
*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்*
-இதனைஅன்று பாரதிபாடிவைத்தான்.

சங்கத்தமிழ் வளர்த்து சரித்திரத்தில் பெயர்பதித்த தமிழ்
பல்லாயிரம் காலம் பழமைகண்ட பெரும்மொழி தமிழ்
வாழையடி வாழையாய் எம்மொழிவளம் காத்த தமிழ்
அந்த அணையாத ஆசையோடு பிணைந்துவிட்ட தமிழ்மொழியினை
புகலிடத்திலும் புதைத்துவிடாது காக்கமுன்நிற்பது சிறப்பேயாம்

அந்நிய மொழிதான் இனியெம் வாழ்வுஎன்றபோதும்
பள்ளியில்பேசும்மொழி பலமொழிகள் ஆனபோதும்
அனைத்து தொடர்புகளும் அதில்தான் தாங்கியிருந்தபோதும்
வேலைப்பழுக்கள் விழிநிறைந்து இருந்தபோதும்
எம்தேசத்தின்சோகம் இதயம்கலந்து நனைந்தபோதும்
அயராது உழைத்து அலையென உயர்ந்து
தமிழ்க்கல்விச்சாலைகளை உருவாக்கியவர்களுக்கு
தாய்மொழி தாய்நாடு இரண்டும் இருகண்களே!

இவ்விரண்டும் இழந்தான் தன்முகவரி தொலைத்தான்
தன்னினத்தின் அடையாளத்தை இழக்கவேண்டின்
இவ்விரண்டையும் மறந்தாலே போதுமென்பர்
தமிழ்பற்று உடையோர்கள். இதுவே.......
புலம்பெயர் ஈழத்தமிழரில் தாய்மொழி
பற்றுள்ளவர்களின் நிறைவான நம்பிக்கையாம்..

அயராஉழைப்பால் தமிழாலயங்கள் உயர்ந்துள்ளன
சரித்திரமாகும் கல்விச்சேவைக் கழகங்கள் வளர்ந்தன
திருவள்ளுவரை முன்னெடுக்கும் பள்ளி விழாக்கள்
பாரதிக்கு சிறப்பூட்டும் சிந்தனை விழாக்கள்
கல்விக்குச் சரஸ்வதியை முன்வைத்து வாணிவிழாக்கள்
இளம்சமுதாயத்தினை நினைவு ஊட்டும்
இன்பத்தமிழ் அரங்கம் இங்கே ஏராளம்.ஏராளம்
இலங்கைக்கல்வியின் பாடவிதானங்களும்
உலகத்தமிழ்முன்னேற்ற முயற்ச்சிகளும் தாராளம் தாராளம்

கலை கலாச்சார பணபாட்டுவிழாக்கள்
ஒளிவிழாக்கள் பரதஆடற்கலை இசைநிகழ்வு
அரங்கேற்றங்கள் எனச்சிறக்கின்றன
கதைகள் சொல்லி கவிதைகள் எழுதிப்பாடி
பக்திப்பாடல்களிலே மெட்டுஇசைத்து களிகூட்டவும்
உலகச்செய்திகள் வாசித்தும் காவியம் படைத்து
வானொலிமூலம் வளர்த்துக்கொண்டே வருகின்றனர்

இளையோரோடு பெற்றோர் தமிழ்மொழி பேசி
எம்மோடு கரம்கோர்த்து தமிழ்க்கலாச்சாரத்தை வளர்க்க
கைகொடுக்கும் வெள்ளைஇனத்தோர் தொகையும் அதிகம்
தாய்தமிழ்மொழி இங்கே சாய்ந்துவிடவில்லை
கிளிமொழியாய் புகலிடத்தில்பேசும் அழகு தமிழருக்கு
இங்கே விளைநிலங்ககள் அதிகம் அதிகம்
இருந்தும் .........................
ஒற்றுமையில்லாத தீராத வைரசு தொற்றி விட்டதினால்
அந்நியமொழிக்கு அடிமையாகி உறங்கிவிட்டனர் சிலர்
ஆயிரம் பிரச்சனைக்கு மத்தியிலும் புகலிடக்கல்வியை
பெரியோர் பெற்றோர் முயற்ச்சியில் இளம்சமுதாயம்
சிறப்புபெற்று வாழும் வளரும் வரலாறுபடைக்கும்
தமிழமொழிக்கல்வி புத்துயிர்ப்போடு மிளிரும் மிளிரும்.

# இசைபாடு



ஸரிகம பதநிஸ என்றுரைத்து சந்தமாய் இசைபாடு
சகலதுமான இறைவனை வாழ்த்திப்போற்றியே கவிபாடு
பாசமெனும் கோயிலிலே பக்தி கொண்டு பண்பாடு
பகிர்வு எனும் பண்பினையே புவியோர்க்கு கற்றுக்கொடு

நேசத்தின் விலைதனை நினைவிலிருத்தி வாழ்ந்துவிடு
நிம்மதியே செல்வமென்று நினப்போடு நடைபோடு
மாசற்றவராய் வாழ முடிந்தவரை மனதைத்திடம்படு
மற்றவர்களின் எண்ண நிழலில் அவர்களையே எடைபோடு

தேசத்தின் நிலைதனை தினந்தோறும் நினைவிலசைபோடு
தெய்வத்தின் துணையாலே மிளிர ஒளிர தினம்பாடு
வாசத்தை தரும் மலராய் வாழ்வை வாழ்ந்துகாட்டு
வறியவரின் வடிவம்தனில் வாழும் இறைவனைக் கண்டுவிடு.

## ஒருதாயின் குமுறல்



தாய்மண்ணை நேசித்த அந்தஅன்னை
ஆசைமகனின் சொல்கேட்டு
வெளிநாடுவரக் கட்டாயப் படுத்தி
பற்பல கற்பனைகளில் மூழ்கி மிதந்து
பிளேன்ஏறி வந்து இறங்கினாளாம்.

மகன் தாரம் ஒன்று வந்ததினால்
வந்ததாயை ஒதுக்கி வைத்தானாம்
மோகம் கொண்டதினால் மோசம் செய்தானாம்
அன்பின் அன்னையைஅணைப்பின் உயிர் வடிவை
அக்கறையின்றி மருமகள் சொல்கேட்டு
அனாதையாய் தனியறையில் அடைத்து வைத்தானாம்
அன்னிய தேசத்தில் அம்மா வென அழைக்க
ஆளில்லா அனாதையாகிப் போனாளாம்

பெத்தவனின் சொல்கேட்டு வந்த பெத்தவள்...
உறங்கமுடியாமல் உள்ளத்தில் அமைதியின்றி
ஓரறையில் அடங்கியே கிடந்தாளாம் அதனால்.....
விசாபெற்று வெளியேறி தாயகம் போவதென்றால்
பாழ்பட்டபாசை தெரியாதே அவளுக்கு
தமிழ்ச்சனத்தை உதவிகேட்க என்றால்
தலையை மறுபக்கம் திருப்பி செல்கின்றனராம்

என்மகன் மரத்தூண் இருக்கிறான்
கட்டையில்போக ஈமக்கடன் செய்வான் ..
பாவி நான் ஏதேதோ நினைத்து வந்தேனே
இப்போ உயிர்போகுமுன்னே எனக்கு
கொள்ளிவைத்து விடுவான் போலுள்ளதே!
இப்படியெனத் தெரிந்திருந்தால்.....
தாயக மண்ணிலே உயிர் போயிருக்கும்
நானும் அங்கு அமைதியாக எம்நிலத்தில்
நித்திய உறக்கத்தில் போயிருப்பேனே!

## மறைந்துபோன மனிதம்.

இதயமெனும் உயிர் தோட்டத்திலே ....
எத்தனையோ றோசாப்பூக்கள்
உலகமெனும் மேடையிலே.......
பலவிதமான மனிதப்பிறவிகள்

பூந்தோட்டசோலைகளாய் சிலஇடங்கள்
பாலைவன வனாந்திரங்களாய் பலஇடங்கள்
பசுமை நிறைந்தவயல் தோட்டங்களெல்லாம்
காய்ந்து கருகி கழையிழந்து போயிடவே
சிதறிப்போன ஆட்டுமந்தைகளாய் சிலரிடத்தில்
மனிதாபிமானம் மரணித்துப் போகின்றன

காதல் என்னும் காமவேட்கையில்
விவாகரத்து முதலிடம் பெற்றுவிட்டது
பாசமெனும் பசுமையான வேலிக்குள்
வேசம் கொண்ட ஏமாற்று வேடதாரிகள்
நாசம் செய்யவென்று பலநரிக்கூட்டங்கள்
பாலியல்உறவு பலாத்காரம் வன்செயல்களென
கண்ணீர் வடிக்கும் பலபெற்றோர்கள்-மண்ணில்
நல்லெண்ணங்கள் நலிந்தே போயின.

தேசம் வாழவேண்டுமென நினைத்தால்......
பாசம் கொண்டு பரிவுகாட்டி பண்பான
நேசத்தோடு இனங்கண்டு கொண்டு
மனிதநேயத்தோடு வாழ வைப்போம்
மறைந்துபோன மனிதத்தை புனிதத்தை.

# பெண்விடுதலை

ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொரு நீதியானஅவலநிலை
அகிலத்தில் திரும்பி சமதர்ம நிலைபெருகிட -இவ்வுலகில்
நிகழும் செயல்களின் உண்மைதனைக் கண்டறிந்து
பெண்விடுதலைக்காய் முழுமூச்சாய் செயல்படுவோம்
இப்பூமியில் குடும்பமென்றால் இருபாலாரும்
தன்னலமே கருதாது தாயகி அமுதூட்டும் போது
அப்பெண்குலத்தை சிலர்அடிமைகள் போல்
நடத்துவதேன்?அவரவர் அறியாமையோ?

அடுப்பூதும் பெண்களுக்கு அரசபணி எதெற்காக?
படுக்கையறைப் பாவையர்க்கு படிப்பறிவும் எதெற்காக ??
அகப்பைபிடிக்கும் பெண்பேனா எடுத்து பணிசெய்வதா?
இந்நாளும் சிலர்க்கு உரிமையில்லையே ஏன்? என்றாலுமின்று......
ஆணுக்கு சரிநிகராய் பெண் நிற்கிறார்கள்தான்!
இருந்தும் இந்தியாவில் கருவறையில் பெண்பிள்ளை
உருப்பெற்றால்........அதையழித்து மீறிப்பிறந்துவிட்டால்
கள்ளிப்பால் கொடுத்து கொலைசெய்யப்பட்டு குப்பையில்
போட்டுத்தொலைப்பதும் இன்னும் நடக்கிறதே!

இளம்பெண்குழந்தைகளை பாலியலுறவுக்கு உட்படுத்தி
காடுகளிலும் கிணறுகளிலும் வீசும்செயல் சாதரரண செயலாக...
களங்கண்ட பெண்களும் கண்ணிரில் தினம்குளிக்க..விலைபோக..ஐயோ
இவ்வகை தாயகநினைவுகள் என்மனதுக்குள் என்னவோசெய்கின்றன்
தாயகத்தில் இச்செயல்கள் நடந்தாலும் பெண்ணினத்தின் விடுதலைக்காய்
பெரியோர்கள் கண்ணிருந்தும் குருடர்களாய்தட்டிக்கேட்க யாருமின்றி
காலமெலாம் பெண்ணினத்தை புண்படுத்தி வாழ்வது முறையா?

ஆணினம் பெண்களின் அரசனுமில்லை
இறைவனது படைப்பினிலே ஏற்றதத்தாழ்வுமில்லை
சிறைவிடுத்துப் பெண்களுக்கு ஆதரவு கொடுப்போம்
பெண்ணின் சமஉரிமையும் சமூகபாதுப்பையும் சமூகம் வழங்கிட
விடுதலை கொடுத்து மீட்புப்பெறுவோம்.

## பொய்யில்லாப் பொய்கள்

உள்ளதைச் சொல்வதற்கு உள்ளமதில்
உண்மை யிருக்க வேண்டும்
சொந்த நாட்டில் சொகுசாக வாழ்ந்து இன்று
சிந்தைகலங்கி பந்தங்கள் பாதியிலே பிரிந்து
இறந்ததுபாதி இல்லாதது பாதியாக
கடல் கடந்து புலம் பெயர்ந்தோம்
புரியாத மொழியிலும் புதிரான வேலைகளிலும்
புகுந்து கொண்டோம் உழைக்கவென

உணவுவிடுதிகளில் உட்புகுந்தபலர்
பெரியபாத்திரங்கள் கோப்பை பீங்கான்
நிலம் உடபட கழுவித் தொலைத்தவர்கள்
உணவும்கூட பரிமாறிக் கொண்டார்கள்
வருபவர் போவார்களை புன்னகையால்
வரவேற்று முகத்தில் சந்தோஷ வரவேற்பு
சாப்பிட விடுதிக்கு வரும் இளம்பெண்களை
பெருமூச்சுடன் அணுகிச் செல்கின்றனர்

அவரில் ஒருவர் தன்னுடைய அம்மாவுக்கு
தான்பெரியதொரு கம்பனியில்
நல்லபதவியில் வேலைபுரிகின்றேன் என
தொலைபேசியில் அறிவித்திருந்தவர்
பி எம் ஏ.. ஓப்பிள்..கடேற்.. வாகனம்.. வாங்கி
தொழில்புரிகின்றேன் என்று கூறினவர்
அவ்வகையான வாகனங்களின் பக்கத்தில்
கோட்சூட்அணிந்து கலர்போட்டோ
ஒன்றல்ல பலது அனுப்பினான்
அம்மாவுக்கு பலபொய்யில்லாபொய்களையும்
கடிதம் எழுதியும் நம்பவைத்தான்.



























60





















அம்மாவும் நல்லசீதனத்துடன் கலியாணம்பேசி
அழகான பெண்ணின் படமும் ஓடிவந்தன
பெண்ணும் வந்து கலியாணமும் நடந்து
காலச்சக்கரம் உருண்டோட-இந்தக்
கள்ளப்பொய்யனின் வாழ்வும்
பொய்யாகிப்போக கண்ணீரில் மிதந்தவன்
கலங்கினான் உணர்ந்தான்தன்னை...............

உண்மை யுறுத்த தொலைபேசியை எடுத்தான்.........
என்அம்மாவே! பொய்யான பொய்களை சொல்லிச்சொல்லி
உன்னை ஏமாற்றியதன் பலன் இன்று நான் தனிமரமம்மா
மன்னியுங்கள் அம்மா என்று மனதாலே பாவமன்னிப்பு கேட்டுநின்றான்.
தேவைதானா இப்போலி வாழ்வும் வார்த்தைகளும்

**பொய்யல்ல உண்மையே வாழ்வை உயர்த்தும்**

# அதுவும் இதுவும்

உள்நாட்டில் உள்ளவர்க்கு -வெளிநாட்டில் மோகம்
வெளிநாட்டில் வாழ்பவர்க்கு -அயல் நாட்டின் தாகம்
என்ன உலகமிது ஆசைக்கோ அளவில்லை
அலைகிறது மானங்கெட்ட மனித இனம்

எல்லாமே இருந்தும் அமைதியிழந்து
ஏங்குகிறார்கள் இங்குவந்தவர்கள்
இதயத்தில் கனத்தினிலே முச்சுக்கஸ்டமாம்
ஓடிஓடி உழைத்து உருக்குலைந்து
அழுகையும் புலம்பலும் தனிமையும்
அன்றாட நிகழ்வுகளாம்

அறிமுகமற்ற நாட்டில் முகவரி இழந்து
புரியாத மொழியில் பேச்சில் பிரச்சனை
எல்லாமிருந்தும் அனுபவம் இல்லாதவர்களாய்
எத்தனைவகை மனிதர்களாய்
காகிதக் கட்டுக்குள் கணனி சொர்க்கத்தில்
வாழ்க்கையைப் புதைத்த பணக்கார
அலங்கார நாடுகள் இவை
அன்புக்கும் கருணைக்கும் தோழமைக்கும்
கிடைக்காத அவசர பூமியிது

அன்பு செய்ய நெஞ்சம் இல்லையாம்
அரவணைக்க கைகள் இல்லையாம்
வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு -அது
சாதனைகளை கொடுக்கும் வகையில்
வாழமுயற்ச்சித்தால்..................................
வாழ முயற்சி திருவினையாக்கும்..

## சேமிப்பு

வாழ்க்கையில் மனிதஇனம் சேமிப்பது
தன்னைப் பாதுகாப்பதற்க்காகவே
யாருக்கும் கொடுத்து உதவாத
மனிதர்களாக மாறிவிட்டனர் பலர்
இளமையில் சிறுகசிறுகச்சேமித்த
அனுபவத்தை மகனான இருந்து
செலவு செய்து சோக்குப் பண்ணினவன்

வயோதிப காலத்தில் வயதான காலம்போக
தலைமயிரும் மாற ஞாபகமும் சிதைந்தன
ஒன்றும் புரியாத நிலை -தடுமாற்றம் ஞாபகமறதி
தள்ளாடும் வயதில் வயோதிபர் மடத்தில்
மரணப்படுக்கையில் இறுதி நாட்கள்
இறுதியில் மரணம் அழைத்துக் கொண்டது .

உண்ணாமல் குடியாமல் இரவுபகலாய் உழைத்து
சேமிப்பு செய்தபணம் யாருக்கு உதவமுடிந்தது?
அவர் சேமித்தபணம் அவருக்கே உதவவில்லையே.
பிள்ளைகள் கைகலப்பில் பணத்திற்காக
சேமிப்பு யாவும் சூழ்ந்திருக்கும் துன்பங்களாக முடிந்தன
அந்நாட்கள் பணத்தை வட்டிபோட்டு சேமிப்புசெய்து
அடைகாத்தவர்கள் பணத்தோட பறந்துபோனார்களா?
நல்ல காரியங்களைச்சேமிப்பு செய்தவர்கள்
மறுவாழ்வில் நல்லபுலன் கிடைக்குமென வாழ்பவர்சிலர்
அவை அனாதை சிறுவர்கட்கும் குடும்பங்கட்கும்
கிறிஸ்மஸ் பரிசுப்பொருட்காக கொடுத்த ஞாபகமுண்டு

அம்மா அரிசிஎடுத்து உலையிலே போடும்போது
ஒருபிடி அரிசி எடுத்து சேமித்ததும்
அதனை வறியவர்களுக்கு உணவாகக் கொடுத்து
அன்பைப் அம்மாவை பலரையும் நினைத்தேன்
எனது அன்புத்தாயையும் நினைவு கூருகிறேன்

# முதுமையின் ஏக்கம்

சிறுவயசு கிட்டி அடிக்க தடிமுறித்தவர்
பட்டிக்கு உணவுக்காய் இலைகுழை ஒடித்தவர்
காற்று மழைபனியென திருமேனி சிலிர்க்க
தாக்குப்பிடித்து ஒடியாடி திரிந்து பறந்தவர்
ஊரெல்லாம் உலகம் சுற்றும் வாலிபனாகி
இன்று-கூனிக்குறுகி சிறுகுழந்தை ஆகினார்

இவையெல்லாம் தரைதட்டிப்போச்சு
படிக்கட்டில் பிடித்து தள்ளாடி இறங்கி
தடியுடன் கூடி மூன்று காலாகிவிட்டார்
காலாட்டி வாழ்ந்து கண்மூடி திரிந்தவர்
அவராடித்திரிய அன்றுநான் பார்த்து சிரித்து மகிழ்ந்தேன்
இன்றவர் காவோலைச்சருகாகிட குருத்தோலைகள் சிரிக்கலானார்
வாக்கும் எண்ணமும் இல்லா மனோநிலையும்
சொல்லும் செயலும் வழிமாறி விட்டுப்போச்சு
இனிப்பார்க்கும் பார்வையுயும் பழுதாகி போச்சு
வாழ்ந்து வளர்ந்து வளம்சேர்த்த அவர்-இன்று
மூலையில் முடங்கி முத்தாகி முழுமுதுமையானார்.

காலனின் கோட்டைவரை அதை உணரவில்லை
நிலவாய் தேய ஆயுளை நினைத்துப் பார்க்கமுடியவில்லை
பொல்லாத அந்தக்காலன் எப்போதும் வரலாம்
அதுவும் இல்லாமல் போகும் நாள்இன்றோ நாளையோ
என்றோ ஒருநாள்அவர் உயிர்போவது இயற்கைதானே
அழுவார்பலரும் உறவினர் ஒப்பாரியும் வைப்பார்
இருநாட்களோ இருபது வருடங்களோ மறந்திடுவர்
சாவுதரும் வேளையில் சருகாகிப்போய்விடும்
நிலமண்ணுக்கு உரமாகிவிடும் அவ்வுடல்
பச்சைப்பசுமையான புற்கள் தன் வளர்ச்சி காட்டும்
வாழ்ந்த சுவடுகளும் முற்றாகமறைந்துவிடும்-ஆனால்...
.எவர்எப்போ மறைந்தாலும் அவர்பெயர் இறவாது வாழும்.

# கடல்த்தாயே!

கடல்தாயே! கடல்தாயே! அன்பாக
பூமிக்கு அழகாக நீலநிறமாக அலங்கரித்து
பூத்துக்குலுங்கும் அன்னையும் நீதானே!
கடல்படுதிரவியங்களை அள்ளித்தந்தவளே!
எல்லோரையும் அரவணைத்து கவர்ந்தவளும்
தவழ்ந்தவளும் முத்தாக அள்ளித்தந்தவளும்
உலகத்தின் சோற்றுக்கெல்லாம் உப்பிட்டதாயே!

டிசம்பர் இருபத்தாறை மனதிற் கொண்டு
இயேசுபிரானின் பிறப்பினை கொண்டாடிவிட்டு
மகிழ்வுடன் அக்கழிப்போடு சிறந்திருக்க
சுனாமி என்ற யப்பான்பெயரில் அலையாய் வந்தாய்
ஏன் திடீரென எம்இனத்தை அள்ளி கொண்டாய்?
கனக்கிறது நெஞ்சம் கரைக்கிறது கண்ணீரில்
கோடிஉயிர்களை ஏன் காவு கொண்டனையோ?

அள்ளுண்டு போனவர்கள் பலபேர் -அதில்
அகதிகளாக இடம்விட்டு அலைந்தோரையும்
மீனின் வயிற்றுப்பசிக்கு இரையாக்கி விட்டாயே!
தம்அருமை வாழ்வினை இழந்து தவிக்கின்றனரே!
பச்சைப்பசேலெனக்காட்சி தந்த வயல்காணிகள்
வீட்டுக்கட்டிடங்கள் குடிசைகள் பள்ளிகள்
ஒருகணப் பொழுதில் அள்ளிச் சென்றாயே!

முத்தான எம்மினம் பித்துப்பிடித்து அலைகின்றதே
வேதனையில் வெதும்புகின்றோம்
வறுமையை போக்கும் அம்மை என்று நம்பினோம்
கடல்த்தாயே! இனிமேலும் எம்மக்களுக்கு கனவில் கூட
சுனாமி என்ற பெயரில் வந்துவிடாதே!

# உலக இறைத்தந்தை அருட்திரு தனிநாயகம் அடிகளார்



*"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே"* -என்ற
திருமூலரின் திருவாக்கை திருத்தந்தையவர்களோ
திவ்வியகடமையாய் தினந்தினம் ஏற்று உழைத்தார்.
முன்னய பிறப்பின் பயன் முழுநிலவாய் ஒளிர்ந்த அவர்
முதலி பரம்பரரையில் உதித்த மூத்ததமிழறிஞராவார்
பனை தென்னை சூழ் நெடுந்தீவு மண்ணின்மைந்தன்
ஸ்ரனிஸ்லஸ் கணபதிப்பிள்ளை அவர்கட்கும்
கரம்பன் தெய்வத்தாய் சிசில் இராசம்மாவுக்கும்
திருமகனாய் உதித்தார்.

கருவிலே உருவாகியபோது கடவுளின் பிள்ளையாகி
கண்ணியமாய் கல்விகற்று கலைகளையும் பயின்றார்
குருவாகித்தேவனின் திருவடிக்கு தொண்டாற்றிடும்
கொள்கையே தனதென்று குவலயத்தில் மிளிர்ந்தார்
திருவாக ஒளிர்ந்து தேவனின் ஆசிபெற்று உயர்ந்து
தேசம் எங்கும்சென்று தமிழத்தொண்டாற்றி மகிழ்ந்தார்
தருவாக நிழல்தந்து தமிழ் இலக்கியக் கழகத்தை
தூத்துக்குடியில் நிறுவித் தூதராய்ப் பணிபுரிந்தார்

ஒளிசிந்தும் விழியழகும் உறுதியான நடையழகும்
ஒருங்கமைந்த உருவில் உற்சாகம் கொப்பளிக்கும்
மொழியினில் பற்றும் முதிர்கத்தோலிக்க மதத்தில்
முடிவில்லா மோகமும் முழுஆயுளும் நீண்டுநிலைக்கும்
தளிர்க்கரம் பற்றி யாழ்-பத்திரிசியார் கல்லூரியில் பயின்றிட
தந்தையார் சேர்த்ததும் தனித்தன்மை ஒளிரும் மிளிரும்
குளிர்நிலவுகுடைந்தெடுத்து பல்கலையினை பயின்றபின்
கூடுதல் விரிவுரையாளராய் பேராசிரியராய் உயர்ந்தீரே!

சொல்லுக்குள் அடங்கிடாத சாதனைகள் பல செய்தீர்
சோர்விலாவிளையாடடு வீரராய் சூளுரைத்துநின்றீர்
வெல்லும் தமிழில் பல நூல்கள் செய்தீர்
வேதத்தின் பலபகுதிகளை விரிவுபடுத்தி எழுதினீர்
தொல்லுலகில் தமிழாராய்ச்சி மகாநாடுகளில் பங்காற்றும்
தூதுவராய் பணிபுரிந்து கோலாலம்பூர் சென்று வந்தீர்
கல்லும் கனியும் உம்வார்த்தைகள் களிப்பூட்டும் ஐயா
காலத்தைக்கட்டிவைத்து கற்கண்டாய் இனித்தீரே!

நெஞ்சத்தை மனத்தில் வைத்து நித்தியமும் உழைத்தீரே!
நித்திலத்தில் நிறைந்தமொழி பதினைந்தில் தெளிந்திரே!
பாசத்தில் எல்லோரையும் பரிவோடுஅழைப்பீரே!
பல்வேறுதேசம் சென்று பணிசெய்து பயின்றீரே!
தேசத்தின் எல்லை தாண்டி தேவனின் பணி தொடர்ந்தீரே!
தெள்ளத்தெளிவாக அன்பு பூண்டு தேவனை சுகித்தீரே!
வாசத்தின் மலரையொத்த வாஞ்சையுடன் வாழ்ந்தீரே!
வாழ்நாளில் உமையொத்து எவரை நாம் காண்போமோ?

ஆண்டுகள் நூறானாலென்ன ஆயிரம் கடந்தாலென்ன
அருட்திரு தனிநாயக அடிகளாரின் நாமம் வாழ்க
வேண்டுதல்கள் ஈடேறுக விழிநீரின் சொரிவு அறுக
வெள்ளிடைமலையாக விசும்புவரை உயர்ந்தவரை
தீண்டுதல்கள் தித்திக்கும் .
தேன்தமிழ்மொழிக்கவியால் தீரும்வரை வாழ்த்துவோம்
தெவிட்டும்வரை பாடுவோம் .
ஆண்டவரின் சேவைக்காய் அவரருகில் அமர்ந்தவராம்
உலக இறைத்தந்தை தனிநாயக அடிகளார்
நாமம் அழியாமல் வாழும்.வாழும்.

## எப்படி மறப்பேன்?

இந்துமா சமுத்திரத்தின் முத்துத்திலகமே!
சிந்தும் அலைதவழும் இலங்கைத்தீவகமே!
காலங்கள் எவ்வளவு கடந்தாலும் .....
கோலங்கள் எத்தனை கூறுபோட்டாலும் .....
புலம்பெயர்ந்து கடல்கடந்து வந்தாலும்......
நாம்பிறந்து தவழ்ந்து விளையாடிய
தாய்நிலத்தை எப்படி மறந்து விட முடியும்?

புலம் பெயர்ந்து நாம் குடியுரிமை எடுத்துவிட்டோம்
வெள்ளையருக்கு அடிமையாகினோம் என
உள்ளத்தில் உவகை கொள்ள
விஞ்ஞானத்தின் விந்தையெல்லாம்
விட்டுக்குள்ளே புகுந்தபடியால் .....
சொகுசான வாழ்க்கையில் குடி மூழ்கினோம்
இருந்தும் யாதும் ஊரே யாவரும்கேளீரென
வாழ்ந்த எம்உறவுகளின் வாழ்வினை
எப்படி மறந்துவிட முடியும் ?

ஒருகணம் எனதுவீட்டை ......
நினைத்துப் பார்க்கின்றேன்
நாட்டையும் பணிசெய்த செழுமையும்
எந்ததுயர்வரினும் பிறந்த மண்ணின் நினைவு
விட்டகலாத மனவலிமை பெருகுகிறது
அம்மா என்றகுரல் எழுந்திட்ட என்மனசு
சும்மா இருக்க முடியுமா?
வாடும் உறவுகளோடு சேர்ந்து
நானும் வாடுகின்றேன்

# பாரதி இன்றிருந்தால் .....

வானம் சிவக்க வான்குயில் பாட
இயற்கையோடு உறவுகொண்டு
எழுத்துக்களாய் புத்துலகம் படைத்தவனே!
அற்புதமான கவிகளை அள்ளி வாரித்தந்தவனே!
கண்களால் தேசபக்தி தெய்வபக்தி அணிகலனாய்
உலகம்போற்ற வாழ்ந்தவனே!

பாரததேசத்தின் மேலுள்ள காதலினால்
தமிழை உயிரெனமதித்த மகாபாரதியே!
என்ன விதியோ அநியாயமாக
மதயானையினால் சாகடிக்கப்பட்டாய்
உருவத்தால் மட்டுமே அழிக்கப்பட்டாய்
உருவாக்கி சென்ற எழுத்துக்கள்
உலகம் உள்ளவும் உன்னை நினைவுகூரும்

நீ இன்றிருப்பின் - வாள்முனையைவிட
உன்பேனாமுனை பெரும்புகழ்சேர்த்திருக்கும்
மொழியின் பெருமையை பெண்ணின் விடுதலையை
நின் கவிதைமூலம் எழுதிக்கொண்டே இருந்திருக்கலாம்
இன்று இலைமறைகாயாக இருப்பவர்ளை
உலகிற்குப் பெருமையாய் உலகறிய வைத்திருப்பாய்
ஈழத்தமிழரின் வளத்தையும் பலத்தையும் மீட்டுக்கொடுத்திருப்பாய்

அற்புதக்கோடி அற்புதங்களை அகிலத்தில் நிகழ்த்தி
ஆச்சரியப்பட செய்திருப்பாய் -எங்களது
தேனான தாய்மொழி தாயகத்தில் தடுமாறிப்போகுதே !
இன்று நீ இருந்திருந்தால் தமிழர் தலைநிமிர்ந்து நிற்க
தமிழ்மொழியை வளர்த்திருப்பாயே!-ஆனால் ..இன்று
நாம் தமிழனாய் அமிழ்கின்றோம் துயரினிலே!
ஐயனே நீ இன்றிருந்தால் ............
இந்நிலை எம்தமிழினத்துக்கு வந்திடாதே!

## எம் பருவகாலங்கள்

மொட்டாகி  பூவாகி கனியாகையில்
அழகோடு இளமை மணம் பரப்பி எழும்பும்
நோயாகி பிணியாகி மருந்து எடுக்கும்போது
கசப்பாக வந்து தினந்தினம் வாட்டி வருத்தும்
படுத்த படுக்கையாய் அமைதியாய் உறங்கும்போது
மனதோடு மனம் உறவாகும்.

துயர்தாங்கி மனம்ஏங்கி தவிக்கையில்
மனம் தாங்கமுடியாமல் தலைசாயும்
படிப்பாகி பதவிபெற்று பணம் ஆள்கையில்
பண்ணோடு வாலிபம் கலை ஆகும்
கண்ணாகி கருத்தாகி செயலாகையில்
காரியம் கைகூடி வசமாகும் .

நன்மையாகி நலமுடன் மகிழ்வாகையில்
நானிலத்தில் பெரும் மன்னனாக அரசாளும்
வாளாகி போராகி புயல்வந்தபோது
வாலிபம் வீரத்தின் தொடர்ச்சி யாகும்
மண்ணாகி புதையுண்டு மறைந்துபோகையில்
மனம்கொண்ட விதி மங்கிப்போகும்
நாளாகிக்கூனிக்குறுகி நரையாகி நலிவாகையில்
நாளும் முடிந்ததென்று ஓய்வு பெற்று உறங்கிவிடும் ..

# வலைக்குள் வையகம்

படைத்தானே ஆண்டவன் மனிதனை
வையத்துள் வலைக்குள்ளே-எங்கே போனது
எமது வையத்தின் மனிதாபிமானம்?
பூ பூத்து காய் முற்றிக்கனியாகின்றன
நிலா தேய்வுற்றுப் பிறையாகும் புவித்தாய்
சுற்றிப் பொழுதேகிப்போகின்றன
இம்மாற்றங்கள் மறை யாகும் - நாம்போய்
பெற்றபெருவெற்றி புகழ்மாலையாவும்
ஓர்நாளில் வாய்ப்பற்று வனப்பற்று
வாடிக் சருகாகின்றன
அடியோடு வளங்களை அழித்து இன்பம் பெற்றும்
வீடுகள் நாடுகள் நகரங்கள் போர் தொடுத்தும்
சினத்திற்கு மறுவடிவமாய் நிலநடுக்கம்
சுனாமி பெருவெள்ளம் சூறாவளி என
உலகவலயத்துக்குள் போக
எதிர் கொள்ள பலமிழந்தவனாய் நாளும்
பொழுதும் நலிந்துமெலிந்து பலியாகின்றன
இழந்துபோனஉயிர்களை துடிக்கும் உள்ளங்களை
பதறும் நெஞ்சங்களைப்பார்த்தும் அடங்கவில்லையே!
இறைவன்கொடுத்த ஈடில்லா உயிர்களை
உன்வானிலை குழப்பத்தின் அழிவுதானே
சமகாலப்பிரச்சனைகளாக
குளிரும் பனியும் மழையும் கடும்வெயிலும்
பருவம் மாறிப்போகும் மாற்றங்களாகும்
தனைவிடவும் மாறிடும் நிலையாவும் வையகவலைக்குள்
கெளரவம் தேடிவடக்கின் வசந்தம்
கிழக்கின் உதயம் என்று பறைசாற்றிவிட்டு
ரீங்காரம் செய்து சுழன்று வருகின்றானே
ஆறுகள் காடுகள் நாடுகளெனச் சுற்றித்திரிந்து
அடியோடு வளங்களை அழித்து இன்பம் பெறுகிறானே
என்றாவது சிறுவசந்தமாவது வையத்துள்
வீசும் என்றும் நம்பிக்கையில் நாமும்.....

# அகங்களும் முகங்களும்

மறைமுகமாய் நேர்முகமாய் பிறர் உள்ளம் வருத்துவர்
மற்ற மனிதர் சுதந்திர வாழ்வில் வளம்பறிப்பர்
கறைபடுத்தும் எண்ணம் களங்கப்படுத்தி விடுவர்
வஞ்சக மனத்தினை வளர்த்திட வழியும் வகுப்பர்
நெஞ்சில் கபடச்செயல்கள் நிலவிடச்செய்வர்
அன்புப் பெற்றோரை உதறித்தள்ளி ஒதுங்கச் செய்வர்
விண்ணவர் போல் வியந்துநிற்பர் விழித்துஇருப்பர்
முன்னின்று வந்தாலும் பழகிவிட்டு யார் நீ என்பர்

தான் பெற்ற உதவியை பிறருக்கு மறுப்பர்
பிறர் பெயர் கெடுப்பதையே பொழுதாக கொள்வர்
கவிஞர் என்றும் கலைஞர் என்றும் அறிஞர் என்றும்
புனிதமான பெயரைக்கொண்டு
தம்பட்டம் அடித்து புகழ் சேர்ப்பர்
குளிரை வெயிலை கண்டபின்னரும்
புரிந்திடமுடியாமல் நிரந்தரம் என்றே எண்ணுவர்
புலம்பெயர்ந்து வந்தாலும் பொருள் பெருக்க அலைவர்

பலபொய்கள்பேசி முன்னுக்குவர ஆரவாரம் எடுப்பவர்
முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைத்துவைத்து
வேடிக்கை பார்ப்பர்
மற்றோர் மயக்கும் முறையில் வாய்ப்பேச்சில் முன்நிற்பர்
நெஞ்சத்தில் வஞ்சகமும் வாய்சொல்லில்
தடுமாற்றமும் கொண்டு நன்றாக நடிப்பர்

நடிப்பவர்களுக்குத்தான் இவ்வுலகம் என்றாலும்
சிந்தித்தால் கேட்பரர்கள் என்ன செவிப்பறை இழந்தசெவிடுகளாக?
நித்தியஉலகில் வாழா நிம்மதி இழந்த கூட்டம்
அத்தனை முகங்களையும் ஏமாற்றியே விடுகின்றனர் மனிதரில்
சிலர்.

## ஆடியின் வியப்பில் ....

தமிழரின் வருடத்தில் ஏழாம்மாதம் ஆடியாம்
ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை கூறியவர்
தங்கத்தாத்தா சேமசுந்தரப்புலவர் ஆவார்
சிறுவர்களுக்கு விடுமுறைக் கொண்டாட்டமாம்
ஊழியர்கட்கு சுற்றுலாத்திருவிழாவாம்
ஆடிவிதைதேடி விதைத்திட்ட வியப்பில்
ஆடிஅமாவாசையும் வந்துதோன்றிடுமாம்-அன்று
மறைந்து போனதந்தையார் தினமும் வந்திடுமாம்
ஆடிப்பனம்பழமும் பழுத்திடுமாம்
பனங்காய்ப்பணியாரம் அடுப்பில் பொரித்திடுமாம்
உற்றார் உறவினர் ஒன்றுகூடி உண்டமாதமாய் -தமிழருக்கு
மகிழ்வுதரும் மாதமேயாக இருந்தது ஆடிமாதம் ஆனால் இன்று......
மனிதவாழ்வை அழித்து சின்னாபின்னமாக்கிய கறுப்புயூலையை
ஆயிரமாயிரம் தமிழர்களின் உயிர் அழிப்பின் நாளை
மறக்கமுடியுமா எமதுதாயமக்களின் கொடியநாளை?
பெரியோர் குழந்தைகள் என்றபேதமின்றி எரியூட்டிய 83கறுப்புயூலையை
துவண்டிடும் எம்மக்களின் கண்ணீர் சோகத்தை செப்பமுடியுமா?

கதறக்கதறக் கொன்றுகுவித்த மயானக்காடாக
இரத்த வெள்ளமாய் சிவப்புநிலமாக்கிய கறுப்புயூலை
உடமைகள் சூறையாடப்பட்டும் எரிந்தும் சாம்பலான வரலாறும்
எப்படிமறப்போம் எம்தேசத்தின் கறுப்பு யூலையை?
எங்கள் தேசியமும் உரிமைகளும் அழித்தொழித்ததுபோதும்
இனி எங்கள் மண்ணில் எந்தயுகத்திலும் மீண்டும் வந்திடாதே!
அன்றைய கறுப்புயூலைபோல்.

## வானுயர்ந்த பெருமாட்டி.

காணொளியின் விளம்பரச் செய்தியில்
பக்கமாக ஓரிடத்தில் அமர்ந்து இருந்து
வயதான அம்மா ஒருவரைப்பார்ததேன்
படுக்கையிலே தோல் சுருங்கிய நிலையில்
பார்ததுப் பரிதவித்துப்போனேன்.
ஈரமனங்கொண்ட 82 வயதான தாயாக
அன்னை திரேசாவாக காட்சி தந்தாள்.
சவால் நிறைந்த வாழ்க்கையில்
அதை ஏதிர்நோக்குத் துணிவை ஏற்படுத்தி
குப்பைஅகற்றி கூலிவேலை செய்து
தன்னையே தியாகம் செய்து குப்பைத் தொட்டியில்
வந்துவிழும் அனாதைப் பிஞ்சுகுழந்தைகளை
கரத்தில் ஏந்தி அணைத்து தன்னைமெழுகாக உருக்கி
தன்மானத்துடன் தலைநிமிர்ந்துவாழ
வழிகாட்டி ஒளிகாட்டி ஒளிவிளக்காய்
வறுமையிலேவாடாத மலராய்
தாய்க்குலமாய் பாசமாய் வளர்த்தெடுத்தாள்.
இறைவன் தந்த வாழ்க்கையாய்
தேவதையே நெஞ்சிலே தாங்கொணாத்சுமைகளுள்
கணவனையும் இறைவனிடம் அனுப்பிவிட்டு
சரித்திரம் படைத்த சாதனைப் பெண்ணாக
தியாகத்தின் தியாகியாகி பச்சைக்குழந்தைகளை
மடிமீது தாலாட்டிய அன்னையவள்
இன்று முதிர்வு அடைந்த நிலையில்
படுக்கையில் பரிதாபத்துடன்
ஏழுவயதுப்பையனை துணைக்கு ஏற்றாள்.
அனாதைக் குழந்தைகளுக்கென தாயாக
எளிமையின் சிகரமாக விளங்கினாள்
ஆதியும் அந்தமும் அன்பெனக் கொள்வதால்
ஆனந்தம் அம்மா உமக்கு உன் கையில் சொர்க்கம்
நீ வாழ்க உன்பணி வளர்க தாயே!

## இன்பக்கழிப்பில் ..

உதயத்தில் கிழக்கை நோக்கி பார்த்தேன்
மெல்ல சிவக்கிறது கிழக்கு வானம்
தொடுவானத்தை பிய்த்துக் கொண்டு
அள்ளிப்பரப்புகின்ற ஒளிக்கீற்றுக்கள்
இவை ஆதவன் உதயத்தின் அழகல்லவா?

உச்சிக் கொப்பிலே பலமொட்டுக்கள் சிலிர்க்க
இசைபாடி தேனைச்சேகரிக்கும் தேனீக்கள்
மலருக்கு மலர் மேல்தாவி
மகரந்தச் சேர்க்கையாகி இனிய கனியாக
இன்பக்கழிப்பிலே பறித்துண்டு கழிப்பேன்.

கோடை என்றவுடனே மலர்ந்து சிரிக்கின்ற
பல வர்ணறோசாப்பூக்கள்
வர்ணம் தீட்டியதுபோல் காட்சிதனை
என்னை கவரவைத்து கவிபுனைய வைத்து
கவிஞனாக்கிய இன்பக்கழிப்பினிலே
வர்ணப்பேனாக்கள் வாங்கிக்குவித்தேன்.
எனது வாழ்க்கையின் வரிகளை
வரைந்து கிறுக்கல் செய்தேன்.

கவிதை கட்டுரைகள் கதைகளாக
எழுதி வடித்தபோது வர்ணமாக அமைய
படித்து படித்து ரசித்த கழிப்பினிலே
அழகு அழகான சேலைகளாக
கணவர் வாங்கி உடுத்தி அழகுபெற
அலுமாரியில் அடுக்கடுக்காய் இருக்க
எடுத்துடுத்தி வியப்பின் இன்பக் கழிப்பினிலே.

# எரியுண்ட யாழ்நூலகம்

எரியுண்ட துயரச் செய்தியை
கண்டும் கேட்டும் யாழ்மக்களின்
இதயத்துடிப்பு வலுவாக அடித்துக் கொண்டன
தாவீது அடிகளாரின் இதயமே நின்றுபோயின
ஆசிய மக்களின் முதல் தர நூலகத்திற்கு
அவலச்சாவு ஏற்பட்டு எரிந்து
மண்ணோடு மண்ணாக சங்கமமாகின.

எரிந்து சாம்பலான ஆவணங்கள்
வெறுமையான நூல்கள் அல்ல
எம்மினத்தின் பாரம்பரிய சுவடிகள்
வீரமாமுனிவர் சிவை தாமோதரம் பிள்ளை
கல்லடி வேலுப்பிள்ளை தங்கத்தாத்தா
எழுதிய அழியாச் சுவடுகள் அவை.
எம்முன்னோரின் மூச்சுக்கள்
சிதைந்துபோனவை வெண்சுவர் கட்டிடம் அல்லவே

ஈழமக்களின் வரலாற்றுப் பொக்கிசங்கள்
காடையர்களின் இனஅழிப்பின் முதல் கட்டம்
அனுமான் எரிக்க மறந்ததை
இருண்ட யுகத்தில் சுவாலை விட்டு எரிந்தன
மாணவர்க்கு வழிகாட்டியாக ஒளிகாட்டியாக
ஒளிவிளக்காய் விளங்கிய பொக்கிசங்கள்
மண்ணாகின ஒழிந்தே போயின
ஆயிரம் பிறவிகள் எடுத்தாலும்
தொலைந்தவைகளை திரும்பப்பெறாத கவலையிது.

## உறவின் முடிவில்.

மண்ணில் வாழ்ந்து சென்ற உறவே
விண்ணில் இறைவன் இன்பம் தருவார்
அன்று உம்மைப் படைத்த இறைவன்
இன்று அவரே உம்மை அழைத்துவிட்டார் .

உலகில் நீவிர் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே!
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே!

இன்று உறவு நாளை பிரிவு
மனிதன் வாழும் ஏட்டினிலே!
என்றும் அழியா உறவு உண்டு
இறைவன் வாழும் வீட்டினிலே!

இந்த உலகில் வாழ்ந்த வாழ்வு
வாழ்ந்த அந்த நாட்கள் நெஞ்சினிலே!
எந்நாளும் உன்தன் அன்பை
வாழ்த்தும் என்தன் நெஞ்சமே!



## மகிழும் மார்கழி

மப்பும் மந்தாரமும் மாறாத
கடுங்குளிரான காலநிலை
வெப்பமின்றி நடுநடுங்கும் உடல்நிலை
இது ஒரு காத்திருப்பின் மாதம்

மரஞ்செடிகள்கூட பட்டமரம்போல்
பனித்துளிகள் படர்ந்துகாணும் காட்சியின் மாதம்
இறைமகன் இயேசுவின் பிறப்பைப்பற்றி
இனமதபேதமின்றி பேசிக் கொண்டாடி மகிழும்மாதம்

இறைமகன் இயேசுவின் பிறப்பில்
வாழ்த்துமட்டைகள் வர்ணங்களாக பறக்கும் மாதம்
நினைவுகள் மாறிமாறி முத்தம் கொடுத்து
மகிழ்ச்சியாக சந்தோசப்பட்டு நிற்கும் மாதம்

விடுமுறைக் காலத்தில் சுற்றிலா பயணத்தில் பங்குகொண்டு
இன்பக்கழிப்பில் கழித்திருக்கும் மாதம்
உற்றார் உறவினர்களை சந்தித்து உறவாடி
உண்டு கழிக்கும் மாதம்

மலரும் மார்கழி மகிழ்வாய் மலரட்டும்
விடியல் எமக்கு விடையை சேர்க்கட்டும்
பழைய ஆண்டின் மார்கழி மாதம் விடைபெறவே
இனிப்பிறக்கும் ஆண்டே தைமாதம் பூத்துக்குலுங்கட்டும

## பொல்லாத காலங்கள்

கிறீஸ்து இந்து இஸ்லாம் எனப் பலவேதங்களை
நேரகாலம் பார்க்காது படித்துவந்தேன்
சன்னிதியடைய -முத்தியடைய கிடைக்கவில்லை
பொய்கள் ஆயிரம் சொல்லியேனும்
திருமணம் கிடைக்க ஆசைபப்ட்டேன்
உண்மையைக் கண்டறிந்து தோற்றுவிட்டேன்

உட்கருத்துதெரியாமல் பலகவிதைகளை எழுதிமுடித்ததேன்.
மெய்க்கருத்தை சரியாகப்புரியாது ஏமாந்துவிட்டேன்.
எதிர்காலத்தை எதிர்பார்த்து கற்பனையில் மூழ்கிஇருந்தேன்
இறந்தகாலம் செத்தே போய்விட்டதென அறிந்துகொண்டேன்
எதிர்காலம் இன்னும்.தான்........ வருவதாகதெரியவில்லை
முப்பொழுதும் இப்படியே கடந்துவிட்டன.

சோறூட்டும் குழந்தைக்கு நிலாவைப்பிடித்து கொடுக்க
விண்வெளியில் காலடிவைக்க கற்பனையில் முற்பட்டேன்
பொல்லாத பாழ்குழியில் விழுந்துவிட்டேன் இதுவே
எனது இறந்தகாலமாகிபோச்சு என்று அறிந்து கொண்டேன்
பொல்லாத காலங்களில் இல்லாத இயலாத ஆசையில்
வாழ்வை வளர்த்து வந்ததினால் .............இன்று
இரண்டுக்கும் நடுவே என்நிகழ்காலத்தை தவறவிட்டேன்.

## படிகள்

பிறப்பினைக் கொண்டாடி மகிழ்ந்து சிறப்பிப்பவர்களே-தம்

வாழ்க்கையின்படியில் இறப்பினை கண்டதும் அழுகின்றனர்

சிறப்பாக புதுவருடம் பிறப்பதை ஏற்கும்போதே ..........தம்

வாழ்க்கைப்படியில் ஓராண்டை இழந்துவிடுவதை உணர்கின்றனர்

நிலையில்லா வாழ்வை உணராது போகும்போதே..................

சிறகு ஒடிந்த பறவைபோல் ஆகிவிடுகின்றனர்

நிலையில்லா எதுவுமே குறையாது இருந்த போதுமே...........

நிலைத்தவன் தன்வழியில் படிகள் ஏறி வெல்கின்றான்

உறவின் அன்பில் அகப்பட்டபடி போனவர்களே...

உண்மை நிலையில் கசிந்தபடி உருகுகின்றனர்

இரவுபகலாய் கைகாலை நீட்டி நித்திரையில் அடங்குபவர்களே

பகல்கனவுகளில் தினம் தினம் மூழ்கி வாழ்கின்றனர் .

நல்ல நூல்களைப்படித்து நல்லவார்த்தைகளை பேசுபவர்களே- தம்

இல்லறத்தை படிப்படியாக உயர்த்தி நல்லறம் காண்கின்றனர்

தராசின் நிறையின்படிகளில் ஒருபடி இரும்பு என்றாலும்கூட

நியாயமாக நின்றுகொள்வதும் நீதியைக் காப்பதும் அதன்படிகளே!

## அன்னை பாக்கியம்



கையில் ஓர்வீணை கொடுத்தால்........கலைவாணி
கைக்குழந்தையை கையில் எடுத்தால்........ அன்னைமரியாள்
முக்காடு போர்த்துப் பார்த்தால்.........அன்னைதிரேசா -தன்
முழுவாழ்வையும் மகனுக்காய் வாழ்ந்தவளே! ......அன்னைபாக்கியம்.

திரு.கந்தையா அவர்களின் துணைவியாகி கனிவாய்வாழ்ந்த தன்வாழ்வில்
தன்கணவனை இளமையில் இழந்தும் மறுதாரம் செய்ய மறுத்து
தான்பெற்றபாலனே பெரிதென்றே தனியாய்தவமிருந்து .-புதுஅவதாரம்எடுத்தே
தன்கண்ணாய் மகனைகாத்திருந்தாள் அன்னைபாக்கியம்

தொட்டிலில்பிள்ளை அழுகின்றதா? தொழுவத்தில் கன்றழுகின்றதாவென
இருபக்கமும் ஒரேமாதிரியான கவனமேயுள்ள இனிய
உள்ளம்கொண்டவளே!
மட்டிலாஅன்பும் மகிழ்வானஅரவணைப்பும் மகனைவிட்டுவிலாகாதமனமுடன்
ஒத்துவிளையாடி நித்தமும் நீ மகிழ்ந்தது கோடிகோடியம்மா.

பாலகனாய் இருக்கையிலுமென்ன பருவமகனாகியபோதும் கூட
படலையிலே மகனுக்காய் காத்திருக்கும் வழிபார்த்திருக்கும் தாயே!
தொழிலுக்கென மகன் கொழும்புபோனாலும் தினமும்நினைந்த வண்ணம்
தனிமையினை தாங்கிக்கொண்டாள் தன் பாக்கியஇல்லத்திலே.

தெய்வக்கோயிலான இல்லத்தை தேடிவருவோரை முகமலரவரவேற்று
உள்ளம்மகிழ உபசரித்து உணவழிக்கும் உண்மைத்தெய்வமே!
பொய்யான உலகத்திலே மெய்யானது அன்பென்று மகனைத்தேடிவந்து
அன்னியதேசத்தில் பேரன்பேத்தியுடனும் அந்திமத்தைகழித்தாயம்மா.

மகன்விரும்பிவாழ்வையே மனதாரஏற்று எம்மதமும் சம்மதமாய்
மணக்கோலத்தில்கண்டு மகிழ்ந்து இன்புறிறருந்த வாழ்வைமறந்து
இறைபதம்அடைந்திடவே இம்மியும்விலகவிரும்பாத மகனும்கூட
இரண்டுவருடத்தில் ஓடிவந்து இணைந்து கொண்டாரோ?

# ஆசைமுகம்

அம்மாஎனும் அன்பின் அவதாரத்தாயே!
ஆண்டாண்டு காலம் முன்னே
என்மீது ஆசைகாட்டி தாலாட்டுப் பாடி
மகிழ்ந்தீர்களானாலும்...........என்னைப்பெற்ற.
பிரவசவேதனையில் நீங்கள் பட்டபாடுகள்
நினைத்தே பார்க்க முடியவில்லையே!

கைநிறைய பணம் உழைத்து
உம்கையில் வாரிப்போட்டாலும்......
என்னை பிரசவித்து எடுக்கையிலே
சிந்திய ரத்ததுளிகளிற்கும் களைப்பிற்கும்
அது இணையாகுமா? ஈடாகுமா?
இதை அன்று புரிந்திருந்தால்......
களைப்பான அந்தப்பிரசவவேதனையில்
நீங்கள் பட்ட துயரத்தை தராமல்.....
நான் கருவறையிலேயே இருந்திருப்பேன்

இன்று வாடிவதங்கி முடிநரைத்து முகம் சுருங்கி............
கூனிக்குறுகிக்குனிந்து நடைதளர்ந்து வாழ்ந்தாலும்.....
அன்றய உங்கள் ஆசைமுகமே -இன்றும்
என்உள்ளமதில் நிலைத்திருக்குமன்றோ

நடமாடும் தெய்வமே! நீங்கள்
நடமாட முடியது முடமானபோதும்கூட
இந்த பரிதாபமான முகத்தைபாராமல்
உம்மை மூதாதையர் இல்லத்தில்
ஒருபோதும்யாருமற்ற அனாதையாய் ....................
அன்னியநாட்டிலே சாகவே விடமாட்டேன்
நீங்கள் எம்மைசுமந்த சுமையாய் .................
நானும் என்றும் உங்களை சுமப்பேன் அம்மா
உங்கள் ஆசீர்வாதம் என்றும் எனக்குவேண்டுமம்மா.

# என் ஆசை.......நிறைவேறுமா?

காலை துயில்எழுந்து என்மாதாவுடன்
தேவமாதாகோயில் போகஆசை
கானக்குயிலின் மெல்லிசையினை
என் காதினிக்க கேட்க ஆசை

மேனிசிலிர்த்திட கிணற்றில் வாளியாலள்ளி
குளிர்தண்ணியில் குளித்திட ஆசை
தனியாக என்தாய்மண்ணில் நின்று
கெந்தி விளையாட ஆசை

சிற்றாடைகட்டி சிறுமண்சோறுஆக்கி
சிறுமியாய் விளையாட ஆசை-என்
முற்றத்துமணலில் அன்னைத்தமிழில்
மீண்டும் □அ□ எழுதிப்படிக்க ஆசை

பூவரசஇலையில் ஊதுகுழல் செய்து
பீப்பீ என சிறுபிள்ளையாய் ஊதித்திரிய ஆசை
தாவாரத்தால் சரஞ்சரமாய்வழியும் மழைநீரில்
சந்தோசமாக குளித்து கூத்தாடஆசை

கம்பளப்பூச்சியை கைப்பிடிக்குள் வைத்திருக்கஆசை
தும்பியை துரத்தித்துரத்தி பிடித்து விளையாடஆசை
பட்டாம்பூச்சியை நூலில்கட்டி பறக்கவிட ஆசை
பட்டம்கட்டி பரந்தவெளியில் ஓடியோடி ஏற்றிடஆசை

முற்றம்கூட்டிப்பெருக்கி குப்பையள்ளஆசை-முற்றத்தில்
வேப்பமரத்துக் கொட்டைகளை பொறுக்கி எடுக்கஆசை
பக்கத்துவிட்டு மாமரத்தில் மாங்காய்பறிக்கஆசை-அதற்கு
உப்புமிளகாய்தேடி அடுக்களையில் அடிவாங்கிட ஆசை

அன்னையவள் கையால் அள்ளிப் பரிமாறிட
தென்னைமரநிழலில் உறவுகளுடன் கூடியிருந்து
பனையோலையில் புளாப்பிடித்து கூழ்குடிக்கஆசை
புல்தரையில் படுத்திருந்து பால்நிலாவைப்பார்த்து
பைந்தமிழில்-புதுப்புதுக்கவிதை எழுதஆசை

கள்ளமறியா இளசுகளோடு ஓடிப்பிடித்து விளையாட ஆசை
கண்ணுக்குஅழகான பையன்களுடன் அன்பாகபேசிப்பழக ஆசை
காதல்வயத்தால் கவிகள்பரிமாறி மனங்களிப்படைய ஆசை
காதலித்த என்கணவனையே மீண்டும் கைப்பிடிக்கஆசை

## தேடினேன்

சுட்டெரியும் வெய்யிலிலே
பனிக்குளிரைத் தேடினேன்
பட்டுக் காய்ந்துபோன மரத்திலே
பச்சையிலைத்துளிர்களைத் தேடினேன்

அலைமோதும் நீலக்கடலினிலே
அமைதி நிம்மதியைத் தேடினேன்
ஒட்டகம் வாழும் பாலை வனத்திலே
சோலை வனத்தைத் தேடினேன்

இருண்டுபோன மயானத்திலே
பிரகாசவெளிச்சத்தைத் தேடினேன்
குடியிருந்த கோயிலிலே கும்பிட
இறைவனைத் தேடினேன்

என்இதயத்தில் உம்மைவைத்து
உம்இதயத்திலே என்னைத்தேடினேன்
பல கல்லறைகளில் கேட்டும் பார்த்தேன்
காவியங்களைப் படித்தும் தேடினேன்
ஒருசில உண்மைகள் கிடைத்தன
ஆனால் நான் நினைத்தவை மட்டும் ....கிடைக்கவில்லை.

# விடிவெள்ளி

கனக்கிறது என்நெஞ்சம் .......
நினைக்கிறது எம்மாணவரின் வாழ்வினை
புலத்திலும் நிலத்திலும் பெருமைசேர்க்கும்
வகையினில் அவர்களின் நிலையினை

விழிகளை இழந்தோம் விதிவசத்தால் -வாழும்
வழிகளை இழக்கவில்லை மதியூகத்தால்
மனவலிமையை என்றும் துணைகொண்டே
வாழ்ந்துகொண்டோம் உயர்வாய் பாரினிலே

பள்ளிப் படலையைத் திறக்கும்போது
விடிவெள்ளி தோன்றிடும் எம்கண்களிலே
எம்வாழ்க்கைப் பாதையில் பள்ளங்கள் பலதைதாண்டி
வெற்றிகண்டோம் உயர்வாய் என்றும் எழுந்தோம்

குப்பிவிளக்கிலும் மரநிழலிலும் ஓலைக்குடிசையிலும்
கல்விக்குவழிகாட்டும் எழுத்துக்களை சொல்லிகொடுத்தே
பட்டம்பதவிகள் பெற்றோம் அன்றும் இன்றும் தாய்மண்ணில்
பெரும்புகழுக்கும் பெருமைக்கும் அவைகொடிகட்டிப்பறக்கின்றன

எம்திறன்களை தினமும் வெளிக்கொணர்ந்தே ...
எம்தேசத்தில் உயர்வாய் எம்தாய்மொழி வாழவளர
எம்செயல்களினால் என்றும் விடிவெள்ளியாய் வாழ்ந்து...
எம் உறவுகளை வளர்த்தெடுப்போம் புலத்திலேயும்.நிலத்திலேயும்

# திருப்பம் வேண்டாமோ?

ஊற்றி ஊற்றிக் குடித்துவிட்டு
உள்ளம் எரிய புகைத்துவிட்டு
மதிமயங்கும் வேளையில்......
எனக்கென்னபோதையாவென
புலம்பும் மகனே! கேள்.

மதுவருந்தாதே! புகைப்பிடிக்காதே !
அதுஅணுவணுவாக கொல்லுமென
அழுத்திச் சொல்லும் அரசுகள்கூட
அந்தமதுவை புகையைத் எங்கும்
தடைசெய்வதில்லையே!!!!

அதுவே அதன்வருமானம்
அதில் உனக்கென்ன லாபம்?
நீ ஏன் அடிமையாகின்றாய் ?
நீயாகவே திருந்திக்கொள்.

நடந்துவந்த பாதையை -நீ
திரும்பிப்பார்- தவறிப்போய்
பள்ளத்தாக்கில் சறுக்கினாலும் ...
நீயாக எழுவதே உன்நலமன்றோ?
மரணித்துக் கொண்டிருக்கும் உன்னை
காப்பதுவும் உன்பொறுப்பன்றோ?

**தவறுவது தவறல்ல -தவறிப்பின் ....**
**தவறுவதே தவறு.**

## அழகோ ..... அழகு.

பெண்மகளாய் மிகஅழகாய் பிறந்தபோது
நானும்உற்றவர்களும் பெருமைப்பட்டோம்
அழகாய் அவள் மண்ணில் தவழ்ந்தபோது
அள்ளி எடுத்து அகமகிழ்ந்தோம்
வட்டநிலா வான்வெளியைவிட்டு இங்கு
வந்ததுபோல் ஓரழகு அவள்முகம்..........
பட்டுத்துகில்போல்.கன்னம் பழபழக்கும்மேனி
சொட்டுத்தேன்போல் தொட்டுசுவைக்கஆசை.....

பெண்அழகின் ரகசியங்களைத் அவளிடம் தேடினேன்
மலரென்னும் நிலாவென்னும் அன்னநடையாளென்னும்
அந்தஅழகுவிழியாளை ஒருபார்வையிலே பார்த்தேன்
ஆனந்தத்தில் கற்பனையில் மூழ்கினேன்.-அதனால்
அழகுஅழகாய் பலகவிதைகள் ஊற்றெடுத்தது என்நெஞ்சில்

பொட்டுவைத்து பூமுடித்த பெண்போல
காட்சியளிக்கையில்.........
அவளிடம் காணும்அழகு கொஞ்சமல்ல
அந்த அற்புதஅழகையே
நினைத்து நினைத்து ரசித்து ரசித்து
இவைகளை திருப்பவும் எழுதி அழகுபார்க்க
அழகேஅழகாக பலகவிகளை எழுதி-நல்ல
கவிஞனாகிப் போகின்றேன் ...........

# இயற்கையின் வனப்பிலே!

இயற்கையின் வனப்பிலே! என்
இதயத்தைப்பறி கொடுத்தேன்
இதமாக செடிகொடியாக வளர்ந்தமரங்கள்
கும்மென்ற மொட்டுக்கள் மலராகிப் பூக்களைத்தந்தன

அழகுஅழகான அந்தவர்ணமலர்கள் பூத்துக்குலுங்கி
மனதிற்கு இதம் அளித்து மகிழ்வைத் தந்தகோலம்
சின்னச்சின்ன மழலைகள் சிரிப்பதுபோல
என்னுள்ளத்தை கொள்ளை கொண்டதன்றோ

எமைப்பிரிந்தவர்கள்எங்கோஇருந்து விடும் கண்ணீராய்
வானத்தில் இருந்துபெய்தமழை ஓய்ந்த பின்
தாமே எம்மைக்காப்பதுபோல காளான்கள் குடைகளாய்
வெள்ளைவெளேரெனும் அழகுமொட்டுக்களாக காட்சிதந்தன

வெப்பத்தின்தாக்கத்தை தாங்காத மலைக்கூட்டம்
அப்பப்போ அழுதகண்ணீர் வடிந்து ஆறாகிப்பெருகிவர
அதிலே ஏதுமறியா மீனினங்கள் துள்ளிவிளையாடிமகிழ்வது
நாளைய பொழுதையறியா சிலமானிடரை நினைவுதந்தன

கடல் பெரிதாய்இருந்தபோதும் உவர்க்கும் அதன் நீ ர்போல
உடல்பெரிதாய் இருந்தாலும் உதவாத சிலரை நினைவுவரும்
விடங்கொண்ட விசப்பாம்பாய் வாழும்சிலரது செயல்கண்டு
நடைப்பிணமாய் நம்முடன்வாழும் மனிதத்தேளா என்றே நினைவுவரும்

## சிந்தித்தால்....... சிரிப்புவரும்

பயணங்கள் செய்வது பலவிதம்
ஒவ்வொன்றும் ஒவ்வோர்க்கும் ஒவ்வொருவிதம்
எமைபடைத்தோனை அடைவதே........
எம்வாழ்க்கைப் பயணத்தின் ரகசியம்

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றபேதமின்றி
எல்லோரும் ஏதோ ஒருநாளில் பயணமே!-இதை
உணர்ந்திங்கு வாழ்வதே வாழ்வின் ரகசியம்
உல்லாசமாக பெருமையாக...... வாழ்ந்தாலும் .....
தவறாது அழைத்திடும் ஒன்று....மரணப்பயணமே
பயணங்கள் எப்படியும் தொடர்ந்தே இருக்கும்

புலம்பெயர் அகதிகள் வாழ்வு துன்பப்பயணமே
என்றும் சோகங்கள் சூழ்ந்த துயரமான பயணமே
கவிஞர்கள் காண்பது கற்பனைப் பயணமே
கேள்விபதில் பரீட்சையில் கலாட்டாப் பயணமே
வல்லவனாய் திழ்ந்ததாலும் வாழ்வு வில்லங்கப்பயணமே

வேலைக்கு செல்வோர்க்கு விரைவு அவலப்பயணமே - அவர்
திரும்பிவருகையில்தான் மனம்....... சாந்திப்பயணமே
தேதியும் தினந்தினம் விரைந்துவர வருடமும் தேயும்பயணமே
இவையாவும் சிந்தித்தால் ........... சிரிப்புவரும் -இதை
சிலவேளை சிந்தித்தால் ..................அழுகையும் வரும்.

## ஓர் ஆத்மாவின் தேடல்.......


பலஆத்மா இன்னும் காத்துக்கிடக்கின்றது
இந்த உடலத்தில் எது என்தனுடையது?
எந்த உறுப்பினைக் கொண்டு எனை
அடையாளம் காண இத்தேடல்கள்?

எலும்பாய் சிறிக்கிடக்கும் முண்டங்களையா?
புதைகுழியில் புதைத்திருக்கும் மண்டைஓடுகளையா?
எவரெவரென எண்ணிக் கணக்கெடுக்கப் போகின்றனர்?
எம்பெண்மையை எச்சப்படுத்தியதை எவர்புதைகுழியில்
எவரிடம் விசாரிக்கப் போகின்றீர்கள்?

அதோ... வானத்தில் இரைதேடி பறந்தலையும்
காகங்களை கேட்டுப்பாருங்கள்
அங்கும்இங்கும் அலையும் தெருநாய்களை
விசாரித்துப் பாருங்கள்-தெரிந்தவரையில்
அவைகளாவது உண்மைகளை ஒப்புவிக்கட்டும்

எம்மவரே!
வெறும் எலும்புகள் என்று கூட்டிப்பெருக்கி
என்எச்சங்களை எரித்திடாதீர்கள் பாதுகாத்திடுங்கள்
வருங்காலத்தில் நாம் பற்பலசேதிகள் சொல்வோம்
சரித்திரம் படைக்க சான்றுகள் பகர்வோம்
உடலைமட்டும்தான் அழித்தார்களே தவிர
எம் ஆத்மாக்களையல்லவே!-
மரபணு ஆய்வுகள் வரட்டும்
அத்தனையும் வெளிவரும்

# மறந்தது எப்படி?



இனிதான சுகமான வாழ்க்கைதனையே
இயந்திர வளமாய் மாற்றி யமைத்து
கணனிக்குள் முகம்புதைத்து அடிமையாகி
வெளிநடப்பு அறிந்தும் அறியாது வாழப்பழகி
நல்லவற்றை நழுவவிட்டு மறந்து வாழ்வதுஎப்படி?

பிணைக்கும் அன்புஉறவை பிரிவுகளில் கருகவிட்டு
கலாச்சார பண்பாட்டை கரையவிட்டு
உறவுகளின் இதயத்தைத் தொலைத்துவிட்டு
மனிதநேயத்தை ஊடறுத்தே..... வாழ்வை உதறிவிட்டு
கனிவான தமிழ்வாழ்வை மறந்துபோனதெப்படி?

தமிழ்மொழியை காற்றலையில் தொலையவிட்டு
தமிழ்க்கல்வியின் புகழ்தனை புகழ்ந்து பாடிப்பாடி
புதுப்புது அறிவியலில் புதுமைகள் கண்டுவிட்டும்
இன்று எம்தமிழ்மொழியை மறந்துவாழ்வதெப்படி?

பூவும்பிஞ்சுமாய் பூத்துகுலுங்கிய எம்தேசம் இன்று
விதவைகளால் நிறைந்து கண்ணீருடன் அலைந்து
நெஞ்சம் தாங்காத்துயரில் அழுவதை கண்டும்கேட்டும்
பஞ்சம்பசியறியாதவர் கூட இன்றுபசியுடன் தெருவில்
நிற்பதினை அறிந்தும் தம்கரம் நீட்டாது தன்னலமாய்
நெஞ்சம்பதையாது புலம்பெயர்மக்கள் மாறியதெப்படி?

தொப்புள்கொடியில் தொடங்கியவாழ்வை தொலையவிட்டு
மடியிலும்தோழிலும் சுமந்தவரை மதியாது தவிக்கவிட்டு
அப்பப்போ வரும் ஆடம்பரங்களில் தம்மை புகுத்தி.....
தம் சொகுசானவாழ்வில்மட்டும் வாழ நினைப்பதெப்படி?

## சகுனம்

இவ்இகபரமே இறைவனின் அரசாட்சிதான் என்பதே
மனிதசமூகத்தின் நம்பிக்கையானபோதும் -சிலர்
மூடத்தனமோ முன்னறிவித்தலோ சகுனம் பார்ப்பதில்
இன்னும்தான் தம்நேரத்தை செலவு செய்கின்றனரே.
தலைக்கு பிடிக்கும் குடையிலிருந்து தாம்
காலுக்கு அணியும் காலணிவரை எல்லாமே
இறைவனின்ஆட்சிதான் என்றும் ஒவ்வொருநிகழ்வுக்கும்
அர்த்தம் உண்டென்றும். நம்பிக்கையாயிற்று.

நல்லதுபார்த்து நேரம்பார்த்து நல்லகாரியம் செய்யும்போதும்
ஒரு நொடிப்பொழுதினிலே அதுஉருமாறிப் போவதேனோ?
சட்டதிட்டத்திற்கேற்ப பயணங்களை ஏற்படுத்தப்படும்போதும்....
அது சிலசமயம் துயர்நிலையாகப் போவதேனோ?
அண்டங்காக்காய் கத்தினால்........மரணசெய்தி வருவதும்
பல்லி தலையில் விழுந்தாலும் அபசகுனம் நடப்பதும்
பூனைஇடமிருந்துவலமாகச் சென்றால் துன்பமென்றும்
நாய் ஊளையிட்டால் அபசகுனமென்றும்
பெண்ணுக்கு வலக்கண்துடித்தால் துன்பமென்றும்
அவரவர் நம்பிக்கை வெளிப்பாடாகும்.

ஆணுக்குவலத்தோள் வலககண்
பெண்ணுக்குஇடக்கண்இடத்தோள்துடித்தலும்
ஊரைக்கூட்டும் காக்கைகரைந்தாலும் கழுதைகத்தினாலும்
நரிகள்விடும் ஓலமும்
பயணத்தில் மங்கலப்பெண் பாக்கியசாலி
சலவைத்தொழிலாளி எதிர்ப்படுதலும்
நிறைகுடமும் பசுவும்பால்க்காரனும் நிறைந்தபொதியும்
நற்செய்தியாம் என்றும்
வாழ்க்கையல் காணும்செயல்களில் சகுனநம்பிக்கை காண்கின்றனர்
மேலைநாடுகளில் விஞ்ஞானம் முன்னேறியபோதும்கூட
பதின்மூன்றையும் அதனுடன்கூடியவெள்ளிக்கிழமையையும்
வெறுப்பவர்களும் இருக்கத்தானே செய்கின்றனர்-இதற்கெலாம் காரணம்
மூடநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் மனிதரிடை
கலந்தே காணப்படுதேயன்றோ?

## அம்மாவின் ஏக்கம்

எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு
என்அம்மாவும் அடுப்படியில் அன்று
தன்சமையலை ஓர்சரித்திரம் ஆக்கி
உவகை பொங்க சாப்பிடவே வைத்திடுவாள்
தேனீர் கலக்குபோதெல்லாம் நாக்குஇனித்திடும்
அசைவமோ சைவமோ அத்தனையும் மெத்தருசி
இத்தனையும் வெளிநாட்டில் கிடையாது என்றாள்அன்று
அத்தனையும் உண்மைதான் உண்மைதான்

இங்கு சைவம்சமைப்போமென்றால்....
பசளை உரம் கெமிக்கல் கிருமிநாசினி
மரக்கறியால்கூட மாறாதவியாதி வருமென்கிறது
உப்புக்கூடப் போட்டால் ரத்தஅழுத்தமாம்
கொழுப்புசாப்பிட்டால் ரத்தத்தில் அது கூடுமாம்
அரிசி கொக்களேற் கிழங்குசீனி என்றால்
சக்கரைவியாதி வந்திடுமாம்
அதிலும் கட்டுப்பாடும் தேவையாம்
நாற்பதுஎன்றால் நாயும் தேடாதபோது...............
வீட்டுக்குவீடு இதுவோர் குடும்பப்பிரச்சனையாம்
எதனைசாப்பிடுவோம் எதனைக்குடிப்போம்
எதிலும்இரசாயனம் எதிலும் உடற்தாக்கம் என்செய்வோம்

மேல்நாடு சொகுசான வாழ்க்கையென்று
நாலுபேர் சொல்வதைக்கேட்டு நாமும் கப்பல்ஏறினோம்
இங்கு புதியநோய்களும் புதிய பழக்கவழக்கங்கள்
என்பதுஉண்மையே அம்மா சொன்னதும் சரிதான்
அம்மாவின் அன்றய ஏக்கமும் சரிதான்.

## என் சொத்து

பிரிவை ஏற்று தனிமையில் இருக்கையிலே
புதுப்புதுக்கவிதைகள் எழுதநேர்ந்து-அந்த
இனிமையில் என்னையும் சேர்த்து
இன்பம் என்பதையே பெற்றுவிடுகின்றேன்.

எழுதி வடிக்கும் கவிதைகள் எல்லாம்
என்றும் பக்க பலமாக வருகின்றன
வரும்பொழுதுகளும் சுகமானதாய்
பழுதின்றிப் போகின்றன.
கவிதைஎழுதி வடிப்பதினால்
மனதின் கவலைகள் ஓடிமறைகின்றன
அக்கணத்தில் புவியில் புதிதாய் பிறக்கின்றேன்

கவிதைகள் எழுதி இற்றைவரை கைக்கூலி
காசுபணத்தை பவுணைப் பெற்றதில்லை
பாராட்டுச்சான்றிதழ்கள் பலதும்
தங்கப்பதக்கமும் பரிசாகப்பெற்றேன்

நான் எழுதிய கவிதைகள் மட்டுமே
எனதுவாழ்வின் அழியாச்சொத்து எனப்
புழகாங்கிதம் அடைகின்றேன்
எனது வானொலிகளுக்கு நான்படைத்த
என்கவிதைகளையே புத்தகமாக்கி
பொக்கிசமாக்கும் வேட்கையில் ......
எனதுகணவருக்கும் அதை அர்ப்பணம்
செய்து ஆனந்தக்கழிப்பில் என்றும் .என்றுமே!

## நன்றி இறைவா

அன்புடனே என்னை உருவாக்கி
அவனியில் சிறப்புடன் வாழச்செய்தார்
பண்புடன் ஒரு தலைவனைத் தந்து
அறிவான மழலைகளைத் தோற்றுவித்து
இன்பமான வாழ்வு எனக்குத் தந்தார்
பாசத்தைப் பொழிந்து வைத்து
பக்குவமாய் வழிநடாத்திக் காட்டினார்
துன்பங்கள் சுமையாக எனக்கு வரச்செய்து
பல சோதனைகளில் சிக்க வைத்தார்
இறைவனின் ஆசியை தந்து
மனத்துனிவை வாரி வளங்கி
துணையாக என்னில் நின்று
ஒரு கதவை மூடி மறு கதவை
அகலத் திறந்து வைத்தார்
அன்பாக என்னைக் கரம் நீட்டி
ஆதரவு எனக்கு அள்ளித் தந்து
முகம் மலர்ந்து வாழச் செய்து
புது வாழ்வு ஒன்றைத் திரும்பத் தந்து
அருமையான பிள்ளைகளின் அன்பு கிடைக்க
ஆறுதலாய் நாம் வாழ்ந்து கொள்ள
புதுமை ஒன்றை எனக்குச் செய்து
அற்புதம் செய்து வைத்தார்
வல்லமை மிக்க ஆண்டவரே உமக்கு நன்றி
அன்புத் தாயே மரியாளே உமக்கு நன்றி

## நன்றி நவிலல்

* நன்றே இம்மலர் அமைந்திட எல்லாவகையிலும் நல்லாசிதந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் முதல்நன்றி.

* பலவெற்றிகளைப்பெற்ற என்இலக்கியப்பயணத்திற்கு பலவகையாக ஆதரவு என்றும்நல்கிய என்கணவர்.அமரர்.க.யூட்.நடேசன்அவர்களுக்கும் என்பிள்ளைகள்ஆன்கேமாலினி-ஆன்பிறேமாலினி-றெஜி.நிசாந்தன்-ஆன்வினோலினிஆகியோருக்கும்நன்றி.

* இம்மலரின் அட்டையை அலங்கரித்த செல்வன் ராம்ஜி வசந்தானந்தன் அவர்களுக்கு என்நன்றி.

* எனதுகவிதைகளை அச்சுக்குமுன் ஒழுங்குபடுத்தியும் பிரதிபண்ணியும் உதவிசெய்த யுலரச .னுச.திருமதி -க-வசந்தானந்தன் அவர்களுக்கும .என்நன்ற

* என் மலருக்கான வாழ்த்துக்களை அனுப்பி வாழ்த்திய உடன்பிறப்புக் களுக்கும் அனைத்து உறவுகளுக்கும் என்நன்றி.

* மலருக்காக வாழ்த்து அனுப்பிய லண்டன் தமிழ் வானொலிஊடகத் திற்கும் அதன் பாமுகத்திற்கும் பிரானஸ் ரி ஆர் ரி தமிழ்ஒலி ஊடகத்திற் கும் என்நன்றி

* இவ்மலரை உருவாக்கம்பெற உதவிய திரு.ம.இரவீந்திரநாதன் அவர்களுக்கும் என்நன்றி.

* இந்நூலை அழகாக வடிவமைத்து தந்த .....அச்சகத்தாருக்கும் என்நன்றி

* என்இரண்டாவது படைப்பான அர்ச்சனைமலர் எனும்கவித்தொகுப்பு வெளிவர பலவகையில் உதவிய எல்லோருக்கும்என்இதயம்நிறைந்த நன்றிகளும் நல்வாழ்த்துக்களும்.உர்த்தாகுக.

# நன்றி நவிலல்

மரபு என்பதால் மட்டுமல்ல எம் மன நிறைவோடு நன்றி சொல்ல கடமைப்பட்டவர்கள் நாம்.

இறையருளால் எங்கள் குடும்பத் தலைவனாக அன்புடன் வாழ்ந்து எல்லோர் மனதிலும் இடம்பிடித்து இறவாப் புகழுடன் இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திரு. க. யூட் நடேசன் அவர்களுக்கு "அர்ச்சனை மலராக" நான் வானொலி மூலம் எழுதி வடித்த கவித்தொகுப்பின் 51 கவிதைகளை சமர்ப்பம் செய்கின்றேன். எனது இப்பயணத்தின் களமாக, துணையாக இருந்தவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூறுவது எனது கடமையாகும். இந்நூல் அரங்கேற உதவியோரையும், என் கவிதைகளை மென்மேலும் எழுதத்தூண்டிய London Tamil Radio, TRT. France அவர்கள் என்னை ஒரு கவிதாயினி என்று எனக்கு அடையாளம் காட்டியமைக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

* நன்றே இம்மலர் அமைந்திட எல்லாவகையிலும நல்லாசிதந்த எல்லாம்வல்ல இறைவனுக்கு என் முதல் நன்றி.

* பலவெற்றிகளைப் பெற்று என் இலக்கியப் பயணத்திற்கு பலவகையாக ஆதரவு என்றும் நல்கிய என் கணவர் அமரர் க.யூட் நடேசன் அவர்களுக்கும் என் பிள்ளைகள் ஆன்கேமாலினி ஆன்பிறேமாலினி றெஜி. நிசாந்தன் ஆன்விவோலினி ஆகியோருக்கும் நன்றி.

* இம்மலரின் அட்டையை அலங்கரித்த செல்வன் ராம்ஜி வசந்தானந்தன், வினோலினி. திரு.மதன் அவர்களுக்கு என் நன்றி.

* எனது கவிதைகளை அச்சுக்குமுன் ஒழுங்குபடுத்தியும் பிரதிபண்ணியும் உதவி செய்த Ayur Dr. திருமதி. க. வசந்தானந்தன் அவர்களுக்கும் நன்றி.

* என் மலருக்கான வாழ்த்துக்களை அனுப்பி வாழ்த்திய உடன்பிறப்புக்களுக்கும் அனைத்து உறவுகளுக்கம் என் நன்றி.

* மலருக்காக வாழ்த்து அனுப்பிய லண்டன் தமிழ் வானொலி ஊடகத்திற்கும் அதன் பாமுகத்திற்கும். பிரான்ஸ் ரி. ஆர். ரி. தமிழ்ஒலி ஊடகத்திற்கும் என் நன்றி.

* இந்நூலை அழகாக வடிவமைத்து தந்த அச்சகத்தாருக்கும் என் நன்றி.

* என் இரண்டாவது படைப்பான அர்ச்சனை மலர் எனும் கவித்தொகுப்பு வெளிவர பல வகையில் உதவிய எல்லோருக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகளும் நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக.

